# 2022

# செயலாற்றுகை அறிக்கை



ශ්‍රී ලංකා සුරාබදු දෙපාර්තමේන්තුව
இலங்கை மதுவரித் திணைக்களம்
**Excise Department of Sri Lanka**

# කාර්ය සාධන වාර්තාව
# செயலாற்றுகை அறிக்கை
# PERFORMANCE REPORT
# 2022

**ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ මුදල් , ආර්ථික හා ප්‍රතිපත්ති සංවර්ධන අමාත්‍යාංශයේ රාජ්‍ය මුදල් දෙපාර්තමේන්තුව මගින් යොමු කරන ලද**
**PFD / RED / COPA / 2019 / 01** **අංක දරණ 2020.01.30 දිනැති මාර්ගෝපදේශ අනුව සකස් කරන ලද**

**இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் நிதி, பொருளாதார, கொள்கை அபிவிருத்தி அமைச்சின் அரச நிதித் திணைக்களத்தின் ஊடாக அனுப்பப்பட்ட PFD /RED /COPA /2019 /01 ஆம் இலக்க, 2020.01.30 ஆம் திகதிய வழிகாட்டல்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்டது.**

## 2022 இற்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

| | | |
|---|---|---|
| நிறுவனத்தின் பெயர் | - | இலங்கை மதுவரித் திணைக்களம் |
| நிறுவனத்தின் முகவரி | - | இல. 353, கோட்டை வீதி, ராஜகிரிய |
| செலவுத் தலைப்பு இல. | - | 248 - மதுவரித் திணைக்களம் |
| மின்னஞ்சல் | - | excisen@slt.lk |
| இணையம் | - | *www*.excise.gov.lk |
| தொலைபேசி இல. | - | 0113-888022 |
| தொலைநகல் | - | 0112-877890 |
| 24 மணிநேர அழைப்பு | - | 1913 |

# உள்ளடக்கம்

**பக்க இல.**

**அத்தியாயம் - 01 நிறுவனத்தின் விபரம்.. நிறைவேற்றுப் பொழிப்பு**

| | | |
|---|---|---|
| **1.1** | அறிமுகம் | 63 |
| **1.2** | இலங்கை மதுவரித் திணைக்களத்தின் தூர நோக்கு, பணிக்கூற்று, குறிக்கோள்கள், பிரதான பணிகள் மற்றும் பெறுமானங்கள் | 64 |
| **1.3** | இலங்கை மதுவரித் திணைக்களத்தின் நிறுவனக் கட்டமைப்பு | 67 |
| **1.4** | இலங்கை மதுவரித் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகங்களின் அமைவிட வரைபடம் | 68 |

**அத்தியாயம் - 02 முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம்**

| | | |
|---|---|---|
| 2.1 | சிறப்பு அடைவுகள் | 70 |
| 2.2 | எதிர்கால இலக்குகள் மற்றும் சவால்கள் | 73 |
| 2.3 | நலன்புரி | 74 |

**அத்தியாயம் - 03 வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை**

| | | |
|---|---|---|
| 3.1 | நிதிச் செயலாற்றுகைக் கூற்று | 76 |
| 3.2 | நிதி நிலைமை பற்றிய கூற்று | 77 |
| 3.3 | நிதிப் பாய்ச்சல் பற்றிய கூற்று | 78 |
| 3.4 | நிதிச் செயலாற்றுகைக் கூற்று - மதுவரி வெகுமதி நிதியம் | 79 |
| 3.5 | நிதி நிலைமை பற்றிய கூற்று - மதுவரி வெகுமதி நிதியம் | 80 |
| 3.6 | நிதிப் பாய்ச்சல் பற்றிய கூற்று - மதுவரி வெகுமதி நிதியம் | 81 |
| 3.7 | நிதிக் கூற்றுக் குறிப்புகள் | 82 |
| 3.8 | ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை | 82 |
| 3.9 | நி.ஒ.208 இன் பிரகாரம் ஏனைய அமைச்சுகள்/ திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களத்திற்கு/ மாவட்ட செயலகத்திற்கு/ மாகாண சபைக்கு வழங்கப்பட்ட ஒதுக்கீடு | 83 |
| 3.10 | நிதியல்லாச் சொத்துகளை அறிக்கையிடலின் செயலாற்றுகை | 83 |

**அத்தியாயம் - 04 செயலாற்றுகைச் சுட்டிகள்**

| | | |
|---|---|---|
| 4.1 | அறிமுகம | 86 |
| 4.2 | நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள் | 87 |

**அத்தியாயம் - 05 நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகளை(SDG) இனங்காணும் செயலாற்றுகை**

| | | |
|---|---|---|
| 5.1 | அறிமுகம | 90 |
| 5.2 | நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் அடிப்படையில் இலங்கை மதுவரித் திணைக்களத்தின் செயற்பாடுகள் மற்றும் அவற்றின் முன்னேற்றம் | 91 |

**அத்தியாயம் - 06 மனிதவள விபரம்**

| | | |
|---|---|---|
| 6.1 | பதவியணி முகாமைத்துவம | 98 |
| 6.2 | நிறுவனத்தின் நிறைவேற்றுகையை மனிதவளத்தில் ஏற்படும் குறை அல்லது மிகை பாதிக்கும் முறை | 98 |
| 6.3 | வெற்றிடங்கள் பற்றிய தகவல்கள் | 99 |
| 6.4 | மனித வள அபிவிருத்தி | 102 |

**அத்தியாயம் - 07 இணக்கப்பாட்டு அறிக்கை**

| | | |
|---|---|---|
| 7.1 | நிறுவனத்தின் செயலாற்றுகைக்கு பங்களிக்கும் முறை பற்றிய இணக்கப்பாட்டு அறிக்கை | 107 |

# அத்தியாயம் - 01

## நிறுவனத்தின் விபரம்/ நிறைவேற்றுப் பொழிப்பு

**1.1** அறிமுகம்

**1.2** இலங்கை மதுவரித் திணைக்களத்தின் தூர நோக்கு, பணிக்கூற்று, குறிக்கோள்கள், பிரதான பணிகள் மற்றும் பெறுமானங்கள்

**1.3** இலங்கை மதுவரித் திணைக்களத்தின் நிறுவனக் கட்டமைப்பு

**1.4** இலங்கை மதுவரித் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகங்களின் அமைவிட வரைபடம்

## 1.1. அறிமுகம்

இலங்கை மதுவரித் திணைக்களமானது, ஏறத்தாழ நூற்றி பத்து வருட வரலாற்றைக் கொண்டு இலங்கையின் அரச வருமானம் சேகரிக்கும் முதன்மை நிறுவனம் ஒன்றாகும். மதுவரி, புகையிலை வரி மற்றும் பீடி புகையிலை வரி வருமான முகாமைத்துவம், அதற்கான சட்ட வலுப்படுத்தல் மற்றும் சமூகப் பாதுகாப்பு ஆகிய முப்பரிமாணப் பணிக்கூற்றுகளை நிறைவேற்றுதற்கு இத்திணைக்களத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 1912 முதல் நூற்றிப்பத்து வருட காலத்தினுள் பல விசேட சம்பவங்கள் இங்கு அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், மீளாய்வு வருடம் 2022 இத்திணைக்களத்திற்கு ஒரு சவால்மிக்க வருடமாக இருந்தது.

இலங்கை மதுவரித் திணைக்களத்தின் மதுவரி ஆணையாளர் நாயகமாக இலங்கைப் பாராளுமன்றத்தின் அமைச்சரவைத் தீர்மானத்தின் பேரில் நான் 2023.01.02 ஆம் திகதி நியமிக்கப்பட்டேன். மீளாய்வு வருடம் 2022 இலே, இலங்கை மதுவரித் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தில் நிர்வாக மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகளின் பொருட்டு மேலதிக மதுவரி ஆணையாளர் நாயகம் ஒருவரும் பதில் மேலதிக மதுவரி ஆணையாளர் நாயகம் ஒருவரும் பிரதான நிதி அலுவலர் ஒருவரும் மதுவரி ஆணையாளர்கள் இருவரும் பிரதான கணக்காளர் ஒருவரும் கணக்காளர்கள் இருவரும் பிரதி மதுவரி ஆணையாளர்கள் 4 பேரும் நிர்வாக உத்தியோகத்தர்கள் இருவரும் சேவை புரிந்தனர். மேலும், மதுவரித் தலைமை அலுவலகத்தில் உள்ளக நிர்வாகத்தினை முறைப்படி மேற்கொள்ளும் பொருட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கணக்காய்வுப் பிரிவு ஒன்றும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஒன்றும் தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்துடன் இணைக்கப்பட்ட புள்ளிவிபரவியலாளர் ஒருவரைக் கொண்ட புள்ளிவிபரப் பிரிவு ஒன்றும் செயற்படுகின்றது.

சகல மாகாணங்களையும் உள்ளடக்கியவாறு 13 உதவி மதுவரி ஆணையாளர் அலுவலகங்கள், 30 மதுவரி அத்தியட்சகர் அலுவலகங்கள், 56 மதுவரி நிலையங்கள், 05 மதுவரி விசேட நடவடிக்கைப் பிரிவுகள், ஒரு போதைப்பொருள் தடுப்புப் பிரிவு என்பன அடங்கலாக வினைத்திறன் மிக்க விசாலமான நிறுவகமாக திணைக்களம் நாடளாவிய சேவையை வழங்குகிறது. அத்துடன் அற்ககோல், சிகரட் உற்பத்தி தொடர்பான உற்பத்திச்சாலைகளில் அமைந்துள்ள மதுவரிப் பிரிவுகளிலும் நிரந்தரப் பணியாளர் குழாத்தினர் இணைக்கப்பட்டுள்ளனர்.

2022 இல் இலங்கை மதுவரித் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட இலக்கு ரூபா 180 பில்லியன் ஆகும். 2022 இன் முதலாம் காலாண்டில் எதிர்பார்த்த இலக்கை அடைய இயலுமாக இருந்த போதிலும் நிலவிய எரிபொருள், பொருளாதார நெருக்கடி மற்றும் கோவிட் 19 தொற்றுநோய் காரணமாக மூன்றாம் காலாண்டின் தொடக்கத்தில் எதிர்பார்த்த வருமான இலக்கான ரூபா 180 பில்லியனை அடைய இயலாத போதிலும் அரசிறை வருமானத்தை அதிகரிக்கும் நோக்கில் நிதி அமைச்சினால் 2022 இற்கான எதிர்பார்த்த வருமான இலக்கினை ரூபா 185 பில்லியனாக திருத்தஞ் செய்யப்பட்டது. பல்வேறு அசௌகரியங்களின் மத்தியிலும் மதுவரி வருமான வரி விலக்களிப்பு (ரூ. 5.1 பில்லியன்) உடன் ரூபா 170.3 பில்லியனை சேகரிக்க திணைக்களத்தால் முடிந்தமை சந்தோசமான விடயமாகும். 2022 இல் நிலவிய கோவிட் தொற்றுநோய் நிலைமை, எரிபொருள் நெருக்கடி, பொருளாதார நெருக்கடி, நாட்டில் நிலவிய அசாதாரண நிலைமை மற்றும் பணியாளர் பற்றாக்குறை என்பன காரணமாக 2022 இல் ஒட்டு மொத்த பணியாளர்களது செயலாற்றுகையில் நேரடித் தாக்கத்தைச் செலுத்தியது.

2022 இல் மதுவரி அலுவலர்களால் நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்ட 35,381 சட்ட விரோத மதுபானங்கள் மற்றும் போதைப்பொருள் சுற்றிவளைப்புகளின் மீது வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு அதன் ஊடாக பெறப்பட்ட தண்டப்பணம் ரூபா 129,497,022.00 ஆகும். உரிமம் பெற்ற நிலையங்களில் 4,155 உரிம நிபந்தனைகளை மீறல்கள் தொடர்பில் அறிக்கையிடப்பட்டதுடன், அறவிடப்பட்ட கூட்டுத் தண்டப்பணம் ரூ. 164,831,863 ஆகும்.
மீளாய்வு வருடத்தின் டிசம்பர் 31 ஆம் திகதியன்று இத்திணைக்களத்தின் மொத்தப் பணியாளர்களின் எண்ணிக்கை 1262 ஆக இருந்தது. வெற்றிடங்களின் எண்ணிக்கை 377 ஆக உள்ளதுடன் அது அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் எண்ணிக்கையின் 23% ஆகும். எதிர்பார்த்த செயலாற்றுகையை எய்துவதற்கு முடிந்தது.

2022 இல் இலங்கை மதுவரித் திணைக்களத்தின் சிரேஸ்ட, மூன்றாம் நிலை மட்டங்களிலுள்ள 49 அலுவலர்களுக்கு பதவியுயர்வு வழங்க முடிந்ததுடன், இரண்டாம் நிலை மட்டத்திலுள்ள 36 பதவிகளுக்கு பதவியுயர்வு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. புதிதாக இணைக்கப்பட்ட 38 மதுவரிப் பரிசோதகர்களுக்கு மதுவரிப் பயிற்சிக் கல்லூரியில் இணைத்து பயிற்சி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. 2022 இல் நிலவிய பல்வேறு நெருக்கடி நிலை காரணமாக முழு அலுவலர்களினதும் பயிற்சியில் தடை ஏற்பட்ட போதிலும் பதவியுயர்வு பெற்ற சகல அலுவலர்களுக்கும் பயிற்சியை வழங்க மதுவரிப் பயிற்சிக் கல்லூரியால் முடிந்தது.

வருமான முகாமை, எதிர்பார்த்த வருமான இலக்கை எய்துதல் என்பன பொருட்டு பாதுகாப்பு ஸ்ரிக்கர் முறையை 2022 இன் தொடக்கத்தில் இருந்து மேற்கொள்ளப்பட்டதுடன், 2022 ஏப்ரல் மாதத்தில் மதுபானப் போத்தல்களின் மீது ஸ்ரிக்கர்களை ஒட்டுதல் கட்டாயமாக்கப்பட்டது. அதனால் வருமானம் கணிசமானளவு உயர்ந்துள்ளது.

இந்த சகல கடமைகளையும் நிறைவேற்றுதல் தொடர்பில் நிதி அமைச்சு மற்றும் திறைசேரியின் இயைபுடைய சகல அலுவலர்கள், இலங்கை பொலிஸ், இலங்கை சுங்கம், உள்நாட்டு இறைவரித் திணைக்களம், சுற்றுலாத்துறை அதிகாரசபை, தேசிய அபாயகர அவுடதங்கள் கட்டுப்பாட்டு சபை, அரச பகுப்பாய்வாளர் திணைக்களம், புகையிலை மற்றும் அற்ககோல் சம்பந்தமான தேசிய அதிகாரசபை, சட்டமாஅதிபதித் திணைக்களம் அடங்கலாக சகல நிறுவனங்களும் இலங்கை மதுவரித் திணைக்களத்திற்கு வழங்கிய ஒத்துழைப்பிற்காக மிகவும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

2022 இல் நிலவிய பொருளாதார, எரிபொருள் நெருக்கடி மற்றும் நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை என்பன காரணமாக இலங்கை மதுவரித் திணைக்களத்தின் ஒட்டுமொத்த செயலாற்றுகைக்கும் ஓரளவிற்கு இடையூறு ஏற்பட்ட போதிலும் அவ்வருடத்திற்குரிய நிறுவனம்சார் நிறைவேற்றுகை மட்டத்தை உயர் சதவீதத்தில் பேணும் பொருட்டு வழங்கிய ஒத்துழைப்பிற்காக மதுவரித் திணைக்களத்தின் சகல மதுவரி அலுவலர்கள், இணைந்த மற்றும் நாடளாவிய சேவை அலுவலர்கள் அடங்கலாக சகல மதுவரி அலுவலர்களிற்கும் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜே.எம்.எஸ்.என்.ஜயசிங்ஹ
மதுவரி ஆணையாளர் நாயகம்

## 1.2 இலங்கை மதுவரித் திணைக்களத்தின் தூர நோக்கு, பணிக்கூற்று மற்றும் குறிக்கோள்கள், பிரதான பணிகள் மற்றும் பெறுமானங்கள்

ශ්‍රී ලංකා සුරාබදු දෙපාර්තමේන්තුව
**Excise Department of Sri Lanka**

*“ වගකීමෙන් සුරක්ෂාවට ”*
***“பொறுப்பினூடான பாதுகாப்பு”***
***“Protection through responsibility”***

**தூர நோக்கு**

மதுபான, புகையிலைக் கைத்தொழிலை முறைப்படி ஒழுங்குபடுத்தலின் ஊடாக அரசிறை வருமான மேம்பாட்டின் பொருட்டு மிகவும் கௌரவமான, பொறுப்புவாய்ந்த அரச நிறுவனமாகத் திகழுதல்.

**பணிக்கூற்று**

சட்டரீதியான விற்பனை வருமானத்தை உருவாக்கும் பொருட்டு வசதிகளைத் திட்டமிடலின் ஊடாகவும், அமுல்படுத்த இயலுமான சகல சட்ட, ஒழுங்குவிதிகளிற்கு இசைவாக செயல்வலுப்படுத்தலின் ஊடாகவும், சட்ட விரோத மதுபானம், அபாயகரமான அவுடதங்கள் மற்றும் மனநிலை தடுமாற்றப் பதார்த்தங்களின் பாவனைக்கு எதிராக விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்படுத்துவதன் ஊடாகவும், தரமற்ற அற்ககோல் பாவனையினால் ஏற்படும் சுகாதாரக் கேடுகளிலிருந்து பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டும், பொருளாதார வளர்ச்சிக்கும் விருத்திக்கும் ஒத்துழைப்பு வழங்குவதற்காக, நாட்டினுள் மதுபானங்கள் மற்றும் ஏனைய அங்கீகரிக்கப்பட்ட அற்ககோல்களை வினைத்திறன் மிக்கதாகவும் பயனுறுதி மிக்கதாகவும் நிர்வகித்தல்.

**குறிக்கோள்கள்**

- உபாயத்திறன், செயற்பாட்டு மற்றும் மூலோபாய மட்டங்களில் பயன்மிக்க தீர்மானங்களை எடுப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கும் பொருட்டு நிறுவனம்சார் நோக்கில் இணக்க மேம்பாடு மற்றும் இடர் முகாமைத்துவத்தின் ஊடாக வருமானம் சேகரித்தலை உயர்வுபடுத்துதல்.

- வருமானத்தை உயர்த்தும் நோக்கில் அறிவை தொடர்ச்சியாக பரிமாற்றம் செய்தலின் ஊடாக உரிய சட்டங்களுடன் பங்குதாரர்களின் இசைவை உயர்த்தலின் மூலம் விற்பனைக்கு வசதியளித்தல்.

- மதுபான, புகையிலை வருமானத்தை நிர்வகித்தல் மற்றும் வசதியளித்தல் இடையே சமநிலையைப் பேணும் பொருட்டு அடிப்படையான இடர் முகாமைத்துவக் கோட்பாடுகளில் வினைத்திறன் மிக்க பிரயோகத்தை மேற்கொள்ளல்.

- மதுவரி சேகரித்தலில் நேர்மையையும் வினைத்திறனையும் பிரயோகித்து பொது மக்களின் நம்பிக்கையைப் பேணுதல்.

- மதுபான உற்பத்தி மற்றும் விற்பனை, தூய்தாக்கப்பட்ட மதுசாரம், தன்மை மாற்றப்படாத மதுசாரம் மற்றும் ஏனைய அங்கீகரிக்கப்பட்ட போதைப்பொருட்களை ஒழுங்கு படுத்தல்.

- சட்ட விரோத மதுபானம் மற்றும் போதைப் பொருட் பாவனைக்கு எதிராக தொடர்ச்சியாக நடவடிக்கைகளை அமுல்படுத்தலும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதலும்.

- சட்ட விரோதமாக மதுசாரம் வடித்தல் மற்றும் இரகசியமாக உரிமம் இன்றி மதுசாரம் வடித்தல் என்பவற்றிற்கு எதிராக சட்ட ஒழுங்கு விதிகளை செயல்வலுப்படுத்தல்.

- தொடர்ச்சியான பயிற்சி மற்றும் அபிவிருத்தி ஊடாக போதியளவு தொழில்சார் மற்றும் தொழில்நுட்ப அலுவலர்கள் இருத்தலை உறுதிப்படுத்துவதற்காக பணியாளர்களின் இயலுமையை விருத்தி செய்தலும் கொள்ளளவைக் கட்டி எழுப்பலும்.

- அதியுயர் திருப்தி மற்றும் முறையான பயிற்சியுடனான அர்ப்பணிப்பு மிக்க அலுவலர்களைப் பேணுதல்.

- மதுபான, போதைப்பொருட் பாவனையைத் தடுத்தல் மற்றும் போதைப்பொருள், மனோவசியப் போதைப்பொருட்களை சட்ட விரோதமாக ஏற்றி இறக்கலை தடுத்தல்.

- நச்சு போதைப்பொருள் மற்றும் நச்சு மதுபான விற்பனையை ஒழித்தலும் அவற்றைப் பாவித்தலில் இருந்து பொது மக்களைப் பாதுகாத்தலும்.

- நிதி அமைச்சு மற்றும் ஏனைய வெளியக நிறுவனங்களுடன் நல்லுறவைப் பேணுதல் மற்றும் வினைத்திறன் மிக்க வரி முறைமையைப் பேணுதல்.

# பணிகள் மற்றும் பெறுமானங்கள்


## பணிகள்

- மதுவரி உரிமம் பெற்ற சகல நிலையங்களையும் மேற்பார்வையிடுதல், நிர்வகித்தல் மற்றும் அவற்றிலிருந்து கிடைக்க வேண்டிய வருமானத்தை சேகரித்தல்.
- மதுவரிக் கட்டளைச் சட்டம், புகையிலை வரிச்சட்டம் என்பவற்றை வினைத்திறன் மற்றும் பயனுறுதி மிக்க முறையில் செயல்வலுப்படுத்தல்.
- நஞ்சுகள், அபின், அபாயகரமான அவுடதங்கள் கட்டளைச் சட்டத்தினை அமுல்படுத்தும் நிறுவனமாக செயலாற்றுதல்.
- நாட்டின் சமூகப் பாதுகாப்பின் பொருட்டு புகையிலை மற்றும் அற்ககோல் மீதான தேசிய அதிகார சபைச் சட்டத்தினை அமுல்படுத்துதல்.
- இலங்கைப் பொலிஸ், சுங்கம், உள்நாட்டு இறைவரித் திணைக்களம் போன்ற ஏனைய சட்ட வலுப்படுத்தும் நிறுவனங்களுடன் நெருங்கிய தொடர்பைப் பேணுதல்.
- சட்ட விரோத மதுபானம், போதைப்பொருட்களிற்கு எதிராக நிறுவன நிகழ்ச்சித்திட்டங்களின் ஊடாக தெளிவுபடுத்தல் மற்றும் சட்ட விரோத மதுபானம், அபாயகர அவுடதங்களின் ஆபத்து பற்றி மாணவர்கள் மற்றும் சமூகத்தை தெளிவுபடுத்தல்.
- 2008 இன் 01 ஆம் இலக்க போதைப்பொருட்கள் மற்றும் மனோவசியப் பொருட்களை சட்ட விரோதமாக ஏற்றி இறக்கலுக்கு எதிராக சமவாயத்தை அமுலாக்குதல்.
- திட்டமிடப்பட்ட வருடத்தினுள் சகல மட்ட பணியாளர்களிற்கும் பயிற்சிகளை வழங்குதல்.
- கூட்டங்கள், கலந்துரையாடல்கள் பொருட்டு சகல தரப்பினருடனும் வினைத்திறன் மிக்க பங்களிப்பை வழங்கல்.


## பெறுமானங்கள்

- அனைவரையும் சமமாக நடத்தும் நட்பு மற்றும் வெளிப்படையான தன்மையுடைய சேவையை வழங்கும் கலாச்சாரத்தைப் பேணுதல்.
- இறுதி இலக்கை நோக்கிச் செல்லக்கூடிய, குழு மனப்பான்மையுடன் சேவையாற்றக் கூடிய அலுவலர்களைக் கொண்டிருத்தல்.
- பாதுகாப்பான எதிர்காலத்தின் பொருட்டு எதிர்கால சந்ததியினருக்கு சரியான வழிகாட்டலின் நோக்கில் சட்ட விரோத மதுபான, போதைப்பொருட்களை ஒழித்தற்கு நடவடிக்கை எடுத்தல்.
- மானிடப் பெறுமதியை மதிக்கும் தனிநபர் ஒருவரை சமுகமயமாக்குதல்.
- முறையான உபாயத்திறன் மிக்க திட்டத்தில் நடவடிக்கை எடுத்தல். புதிய தொழில்நுட்ப முறையின் கீழ் பயனாளிகளிற்கு வினைத்திறன் மிக்க, அதியுயர் சேவையை வழங்குதல்.
- நவீன தொழில்நுட்ப முறையின் கீழ் சரியான முறையில் வரி சேகரித்தல்.
- நம்பகரமான தரவுத் தளத்தைப் பேணுதல்.
- நச்சு போதைப்பொருட்கள் மற்றும் நச்சு மதுபானப் பாவனையை இழிவுபடுத்தும் பொருட்டு நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துதல்.
- வெளியக நிறுவனங்களுடன் நல்ல ஒருங்கிணைப்பைப் பேணுதல்.

## 1.3 இலங்கை மதுவரித் திணைக்களத்தின் நிறுவனக் கட்டமைப்பு



## 1.4 இலங்கை மதுவரித் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகங்களின் அமைவிடங்கள்



# அத்தியாயம் -02

## முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம்

2.1 சிறப்பு அடைவுகள்
- 2.1.1 வருமானம்
- 2.1.2 நிர்வாகம்
- 2.1.3 தகவல் தொழில்நுட்பம்
- 2.1.4 சட்ட வலுப்படுத்தல்
- 2.1.5 ஆதரவளிப்பு
- 2.1.6 கற்கைகளும் ஆராய்ச்சியும்

2.2 எதிர்கால இலக்குகள் மற்றும் சவால்கள்
- 2.2.1 எதிர்கால இலக்குகள்
- 2.2.2 சவால்கள்


2.3 நலன்புரி

## 2.1 சிறப்பு அடைவுகள்

### 2: 1: 1 வருமானம்

2022 முழுவதும் இலங்கைக்கு சவால் மிக்கதொரு வருடமாகும். அதற்கான பிரதான காரணம் 2022 இல் நிலவிய எரிபொருள் நெருக்கடி, மின் வெட்டு, பொருளாதார நெருக்கடி, கோவிட் தொற்றுநிலை மற்றும் நாட்டில் நிலவிய அரசியல் ஸ்திரமின்மை காரணமாக மக்களின் வாழ்வில் ஏற்பட்ட பாதிப்பாகும்.

- இலங்கை மதுவரித் திணைக்களம் 2022 ஆம் வருட ஆரம்பத்தில் நிதி அமைச்சிற்கு சமர்ப்பித்த செயல் திட்டத்தின் பிரகாரம் மதுவரி மற்றும் புகையிலை வரி வருமானமாக ரூபா 185 பில்லியனை சேகரிக்க உடன்பட்ட போதிலும் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியளவில் சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் (வரி விலக்களிப்புடன் சேர்த்து) ரூபா 170.3 பில்லியன் ஆக இருந்தது. இந்த வருமானம் 2021 உடன் ஒப்பிடுகையில் 20.2% அதிகரிப்பைக் காட்டியது. புகையிலை வரி வருமானம் 2021 உடன் ஒப்பிடுகையில் 9.7% அதிகரிப்பாக அறிக்கையிடப்பட்டுள்ளது. எரிபொருள், மின்சார, பொருளாதார, அரசியல் மற்றும் சுகாதாரம் போன்றவற்றில் ஏற்பட்ட நெருக்கடிகள் காரணமாக மதுபான உற்பத்திச்சாலைகளும் மதுபான சில்லறை விற்பனை நிலையங்களும் மூடப்பட்டிருந்த அதே வேளை நாட்டில் காணப்பட்ட பணவீக்க நிலைமை காரணமாக மதுபானத்திற்கான கேள்வி குறைவடைந்தமையால் பாதிப்பை எதிர்கொண்ட போதிலும் இத்தகைய வருமானத்தைப் பெற்றமை சிறப்பானதொரு அடைவு என்பதுடன், 1912 – 2022 காலப்பகுதியில் பெற்றுக்கொண்ட உயர் வருமானமாகவும் அறிக்கையிடப்பட்டுள்ளது. மேலே குறிப்பிட்ட நெருக்கடிகள், தனிமைப்படுத்தல் சட்டங்களின் பிரகாரம் மதுபானசாலைகள், உற்பத்திச்சாலைகள் என்பன மூடப்பட்டிருந்தமை, சுற்றுலாக் கைத்தொழில் தேக்கமடைந்தமை போன்ற காரணங்களால் எதிர்பார்த்த வருமானத்தைப் பெற்றுக் கொள்ளத் தடை ஏற்பட்டது.




- அவ்வாறே மதுபானம், மென் மதுபானம் என்பன ஏற்றுமதி செய்தலின் ஊடாக ரூ.5.1 பில்லியன் மதுவரி மீளச் செலுத்தப்பட்ட பின்னர் ரூ.165.2 பில்லியன் சேகரிக்க முடிந்தமை விசேடமானதாகும்.

- மதுவரி அறிவித்தல் 04/2019 இன் பிரகாரம் இறக்குமதி செய்யப்படும் வெளிநாட்டு மதுபானங்களுக்கு பாதுகாப்பு ஸ்டிக்கரை ஒட்டுதல் 2019.07.15 முதல் ஆரம்பிக்கப்பட்டதுடன் பாதுகாப்பு ஸ்டிக்கர் ஒட்டுதல் சம்பந்தமான சகல விதி முறைகளும் இவ்வறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. மதுவரி அறிவித்தல்கள் 06/2019, 01/2020, 03/2020, 01/2021 களின் ஊடாக உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மதுபான போத்தல்கள் மீது பாதுகாப்பு ஸ்டிக்கரை ஒட்டுதலை ஆரம்பிக்கும் திகதி காலத்திற்குக் காலம் திருத்தஞ் செய்யப்பட்டதுடன் மதுவரி அறிவித்தல் 04/2019 நீக்கப்பட்டு மதுவரி அறிவித்தல் 07/2021 வெளியிடப்பட்டது. மதுவரி அறிவித்தல் 07/2021, 08/2021, 09/2021 இன் ஊடாக உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் சகல மதுபானப் போத்தல்கள் மீதும் பாதுகாப்பு ஸ்டிக்கரை ஒட்டுதலை ஆரம்பிக்கும் திகதி காலத்திற்குக் காலம் திருத்தஞ் செய்யப்பட்டதுடன் அவ்வறிவித்தல்கள் நீக்கஞ் செய்யப்பட்டு உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மதுபான போத்தல்கள் மீது பாதுகாப்பு ஸ்டிக்கர் ஒட்டுதல் மற்றும் டிஜிட்டல் அடையாளத்தைப் பதித்தல் ஆரம்பிக்கும் தினமாக 2022 ஜனவரி 3 என வெளியிட்டு மதுவரி அறிவித்தல் 10/2021 வெளியிடப்பட்டது. தற்போது மதுவரி அறிவித்தல் 07/2021 இன் ஒழுங்குவிதிகளின்படி உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மதுபானங்களிற்கும் இறக்குமதி செய்யப்பட்ட வெளிநாட்டு மதுபானங்களிற்கும் பாதுகாப்பு ஸ்டிக்கர், டிஜிட்டல் அடையாளம் என்பன பொறிக்கப்படுகிறது.

- அரச வருமானத்தை அதிகரிக்கும் நோக்கில் 2022 இன் வரவுசெலவுத் திட்ட யோசனை ஊடாக பீடி உற்பத்தியில் பீடிக்கான பீடிப் புகையிலை வரி விதித்தலினால் திணைக்கள வருமானத்தை அதிகரிக்க முடிந்தமை பெற்றுக்கொண்ட சிறப்பு அடைவாகும். இந்த வரி சேகரித்தலுக்குத் தேவையான சட்டப் பின்னணி 2022.12.31 ஆம் திகதிய 1999 இன் 08 ஆம் இலக்க புகையிலை சட்டத்தின் கீழான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக வெளியிடப்பட்டது.

- இலங்கை முழுவதும் சட்ட விரோத மதுபானம், சிகரட் மற்றும் போதைப்பொருட்கள் பற்றிய 35,381 சுற்றிவளைப்புகள் மேற்கொள்வதற்கு சட்ட வலுப்படுத்தல் பிரிவினால் முடிந்தது. அச்சுற்றிவளைப்புகளிற்கு அமைய தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளிற்காக ரூ.129,497,021.50 தண்டப்பணம் கிடைக்கப் பெற்றது. மேலும் உரிம நிபந்தனைகளை மீறியமைக்கு எதிராக 4,155 தொழில்நுட்பக் குற்ற அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டு ரூ.164,831,863 கூட்டுத் தண்டப்பணத்தை அரசிற்கு பெற்றுக்கொடுக்க முடிந்தமை சிறப்பான அடைவாகும்.

### 2 : 1 : 2 நிர்வாகம்


- 2022 இல் நிர்வாகப் பிரிவினால் திணைக்கள அலுவலர்களுக்கு பதவி உயர்வு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. சிரேஸ்ட மட்டத்தின் பதவி உயர்வுகள் 01 உதவி மதுவரி ஆணையாளருக்கும் 11 மதுவரி அத்தியட்சகர்களுக்கும் வழங்கப்பட்டதுடன் இரண்டாம் நிலைப் பதவி உயர்வுகள் 33 மதுவரி சார்ஜன் மேஜர் பதவிகளுக்கும் 01 மதுவரி சார்ஜன் பதவிக்கும் பதவி உயர்வு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

- அத்துடன், குறிப்பிட்ட காலத்திற்கு அலுவலர் சம்பள ஆண்டேற்றம் செயல்வலுவில் இல்லாமலிருந்த 770 சீருடை அலுவலர்களுக்கும் 184 சிவில் அலுவலர்களுக்கும் சம்பள ஆண்டேற்றம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் உதவி மதுவரி ஆணையாளர்கள், பிரதான மதுவரிப் பரிசோதகர்கள், மதுவரிப் பரிசோதகர்கள், மதுவரி சார்ஜன் மேஜர், மதுவரி சார்ஜன்/ மதுவரிக் காவலர் மற்றும் மதுவரிக் காவலர் சாரதி ஆகிய பதவிகள் பொருட்டு வினைத்திறன் தடைகாண் பரீட்சைகள் வெற்றிகரமாக நடத்தப்பட்டது. 2022 இல் புதிதாக 38 மதுவரிப் பரிசோதகர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர்.

### 2 : 1 : 3 தகவல் தொழில்நுட்பம்

- உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குத் தேவையான தரவுகளை இணைய வழியில் இடைவெட்டுமுகத்தின் ஊடாக வழங்க முடிந்தமை.
- இலங்கை சுங்கத் திணைக்களத்தின் ASYCUDA முறை ஊடாக ஏற்றுமதி, இறக்குமதிப் பணிகளிற்கு இணைய (Online) முறை வசதிகளைத் தயாரித்தல் மற்றும் தரவுப் பரிமாற்றம் செய்ய முடிந்தமை மற்றும் உரிய அலுவலர்களுக்கு இயைபுடைய பயிற்சி, தகவல் தொழில்நுட்ப வசதிகளை வழங்கியமை.
- 2022 இல் செயற்படுத்த உத்தேசித்துள்ள பாதுகாப்பு ஸ்ரிக்கர் வேலைத்திட்டத்திற்குரிய தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகளை SLT நிறுவனத்திலிருந்திலிருந்து பெற்றுக்கொள்ளல் மற்றும் அதற்காக MSP (Madrass Security Printers) நிறுவனம், இலங்கை மதுவரித் திணைக்களம் SLT நிறுவனம் என்பவற்றை ஒருங்கிணைத்து முத்தரப்பு உடன்படிக்கையைச் செய்துகொள்ளல் மற்றும் அவ் வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக செயற்படுத்த முடிந்தமை.
- பொதுக் கணக்குகள் பற்றிய குழுவின் கட்டளையை செயற்படுத்தலின் கீழ் திணைக்களத்தின் வருமானம் சேகரித்தலை கணனி முறை(Dgital) ஒன்றின் ஊடாக மேற்கொள்வதற்கு அறிமுகஞ் செய்யப்பட்டுள்ள வருமான முகாமை முறைமை (Revenue Administration System For Excise Department – RASED பொருட்டு System Requrement Specitication – SRS இன் முதலாம் வரைவு தயாரித்தல்.
- அதிவேக வலையமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் பிராந்திய அலுவலகங்களுக்கு கணனிகள் மற்றும் கணனி உதிரிப்பாகங்களை வழங்க நடவடிக்கை எடுத்தல்.

### 2:1:4 சட்ட வலுப்படுத்தல் (குற்றம்)




- 2022 இல் நாடு முழுவதும் உள்ள மதுவரி உரிம நிலையங்களில் மேற்கொள்ளப்படும் முழுமையான மேற்பார்வை மற்றும்

நிர்வாகத்தின் ஊடாக உரிம நிபந்தனைகளை மீறுதல் தொடர்பான 4,155 தொழில் நுட்பக் குற்ற அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டதன் மூலம் அரசிற்கு கூட்டுத்தண்டப்பணம் ரூ.164,831,863 இனைப் பெற்றுக் கொள்ள முடிந்தமை.

- 35,381 சட்ட விரோத மதுபானங்கள் மற்றும் போதைப்பொருள் சுற்றிவளைப்புகளின் மீது வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு அதன் ஊடாக ரூபா 129,497,021.50 ஐ தண்டப்பணமாக பெற முடிந்தமை.

- பொது மக்களுடன் நெருக்கமாக பணியாற்றும் பொருட்டு பொது சன முறைப்பாடுகளிற்கு முக்கியத்துவம் வழங்கலின் பொருட்டு விசேட தொலைபேசி இல. 1913 இனை 24 மணி நேரமும் செயற்படுத்துவதன் ஊடாக 1,552 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றதுடன், அம்முறைப்பாடுகள் மதுவரிப் பிராந்திய அலுவலகங்களிற்கு உடனடியாக அனுப்பப்பட்டன.

- சட்ட வலுப்படுத்தல் பிரிவின் மேம்பாடு, அலுவலர்களின் பாதுகாப்பிற்காக 9 மி.மி. வகையில் 140 பிஸ்ரல்களைக் கொள்வனவு செய்வதற்கு இலங்கைக் கடற்படை, பாதுகாப்பு அமைச்சுடன் இணைந்து பெறுகை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன் 2023 இல் இந்த அளவு துப்பாக்கிகள் கொள்வனவு செய்யப்படவுள்ளது. இதன் ஊடாக சட்ட அமுலாக்கல் அலுவலர்களுக்கு சுய பாதுகாப்பையும் களத்தில் உயர் மட்டத்திலான சுற்றிவளைப்பையும் மேற்கொள்ள சந்தர்ப்பமளிக்கும்.

## 2:1:5 ஆதரவளிப்பு

- இலங்கை மதுவரித் திணைக்களத்தின் பிரதான நோக்கமான, உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் சகல மதுபானங்கள், இறக்குமதி செய்யப்படும் மதுபானங்கள், அற்ககோல் வடிக்கும் மூலப்பொருட்கள் என்பவற்றை உரிய தரத்தில் இருக்குமாறு பேணுவதற்கும் தரமான உற்பத்திகளை சந்தைக்கு அனுப்புவதற்கும் மத்திய இரசாயனப் பகுப்பாய்வுகூடம் ஒன்றை நிறுவுதல் மிகவும் அவசியமானதாக காணப்பட்டது. அதற்கிணங்க, திணைக்களத்திற்குரிய பூகொடை மதுவரி நிலையத்தில் பேணப்படும் நவீன கட்டடம் ஒன்றில் இந்த மத்திய இரசாயன பகுப்பாய்வுகூடத்தை தாபிப்பதற்கான நடவடிக்கைகள் 2021 இல் ஆரம்பிக்கப்பட்டதுடன் அதன் எஞ்சிய வேலைகளை மேற்கொள்வதற்காக ரூபா 100 மில்லியன் ஒதுக்கீடு 2022 இன் வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

- 2022.01.01 ஆம் திகதியளவில் மதுவரித் திணைக்களத்திற்குச் சொந்தமான இலவசக் காணிகளின் எண்ணிக்கை 28 ஆக இருந்ததுடன் 17 காணிகளின் உரித்து கையகப்படுத்தப்பட வேண்டியிருந்தது. அதன் பிரகாரம் தற்போது 17 காணிகளில் 3 காணிகள் கையகப்படுத்தப் பட்டுள்ளதுடன் 14 காணிகளின் கையகப்படுத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 2:1:6 கற்கை மற்றும் ஆராய்ச்சி

- இலங்கையில் கள்ளிற்கு உரிய தரநிலை தயாரித்திருக்காமையால் செயற்கைக் கள் உற்பத்தியைக் கட்டுப்படுத்துதல் சிரமமாக இருந்தது. அதற்கிணங்க, இலங்கை மதுவரித் திணைக்களத்தின் கற்கை மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு, இலங்கைத் தரநிர்ணய நிறுவகம் மற்றும் அரச இரசாயனப் பகுப்பாய்வாளர் அலுவலகத்துடனும் வெளியே கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்துடனும் இணைந்து தென்னம், பனம் மற்றும் கித்துள் கள்ளிற்கு தரநிர்ணயம் வகுப்பதற்கு தேவையான ஆராய்ச்சி ஆரம்பிக்கப்பட்டது. கடந்த வருடம் நிலவிய பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகள் காரணமாக அந் நடவடிக்கைகளில் சில தடங்கல்கள் ஏற்பட்ட போதிலும், தற்போது அதன் வளர்ச்சியில் நல்ல முன்னேற்றம் காணப்படுவதுடன் ஆராய்ச்சி நடவடிக்கைகள் தொடர்ந்து வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுகிறது.

- மேலும், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் சாராயம், பியர் பொருட்டும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் வெளிநாட்டு மதுபானம் பொருட்டும் தரநிர்ணயமானது, தயாரிக்கப்பட்டு நிறைவடைந்துள்ளதுடன் வைன் மற்றும் சக்கே பொருட்டும் தரங்களைத் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. செறிவு கூடிய மதுபானங்களான பியர் மற்றும் சக்கேயை போத்தலில் அடைக்கும் 26 உற்பத்திச்சாலைகள், 14 வடிசாலைகள் மற்றும் 15 குதங்கள் என்பன இத்திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் காணப்படுகிறது. 56 பிராந்திய மதுவரி அலுவலகங்களின் ஊடாக உற்பத்தி செய்யப்படும் மதுபானங்களை சந்தைக்கு வெளியிட்ட பின்னர் அதன் தரம் பற்றிய மேற்பார்வை நடவடிக்கைகள் இடம்பெறும். ஒவ்வொரு நிலையத்திற்கும் ஆகக்குறைந்தது ஒரு ஹைட்ரோமீட்டர் கருவியாவது வழங்கப்படல் வேண்டும். அதன் பிரகாரம் நாடு முழுவதும் உள்ள சகல மதுபான உற்பத்திச்சாலைகளிற்கும் தேவையான

செறிவை அளக்கும் 54 (Hydrometers) உபகரணங்களைக் கொள்வனவு செய்ய ரூ. 138 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டதுடன் தற்போது கொள்வனவிற்கான பெறுகை நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடிந்தமை சிறப்பம்சமாகும்.

## 2:2 எதிர்கால இலக்குகள் மற்றும் சவால்கள்

### 2:2:1 எதிர்கால இலக்குகள்

- 2022 இல் நிதி அமைச்சினால் வழங்கப்பட்ட மதுபானம் மற்றும் புகையிலை பொருட்டான திருத்தஞ் செய்யப்பட்ட இலக்கிற்குரிய வரி வருமானம் ரூபா 185 பில்லியன் என்பதுடன் அதனை எதிர் வரும் 2023 ஆம் வருடத்தில் ரூபா 217 பில்லியன் வருமான இலக்கினை எட்டுவதற்கு மதுவரித் திணைக்களம் எதிர்பார்க்கின்றது. பீடி உற்பத்தி மீது விதிக்கப்பட்ட புதிய வரிக் கொள்கையின்படி, 2023 இல் பீடி பொருட்டு ரூபா 3 பில்லியன் வரி வருமானத்தைப் பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது.

- 2023 இற்கான புதிய மதுவரி உரிமங்களை வழங்குதல் மற்றும் சுற்றுலா சபையால் அங்கீகரிக்கப்பட்ட ஹோட்டல்களிற்கு மென் மதுபான உரிமங்களை வழங்குதல்.

- இலங்கை மதுவரித் திணைக்களத்தில் 23 பிராந்திய அலுவலகங்கள் வாடகை அடிப்படையில் பெறப்பட்ட கட்டடங்களில் செயற்படுகின்றன. அவற்றில் கொழும்பில் அமைந்துள்ள போதைப்பொருள் தடுப்புப் பிரிவு மற்றும் நாடளாவிய ரீதியிலுள்ள விசேட நடவடிக்கைப் பிரிவுகள் என்பன கடுமையான இட நெருக்கடியின் கீழ் பேணப்படுகிறது. எனவே வாடகை அடிப்படையில் இயங்கும் அலுவலகங்களுக்கு நிரந்தர மதுவரி நிலையங்களை அமைத்தல் பிரதான இலக்காகவுள்ளது.

- பூகொடை மதுவரி நிலையத்துடன் இணைந்த மதுவரித் திணைக்களத்திற்குச் சொந்தமான நவீன கட்டிடம் ஒன்றில் இரசாயன ஆய்வுகூடம் ஒன்றை நிறுவும் பொருட்டு தேவையான நடவடிக்கைகள் 2021 இல் ஆரம்பிக்கப்பட்டதுடன் அதன் எஞ்சிய வேலைகளை மேற்கொள்ள ரூ. 100 மில்லியன் ஒதுக்கீடு 2022 வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக அங்கீகரிக்கப்பட்டது. அதன்படி ஆய்வு கூடத்தின் ஆரம்பப் பணிகள் அதாவது அதன் பகுதி பிரித்தல் (Partition), ஆய்வு கூட நடவடிக்கைக்குத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் தளபாடக் கொள்வனவு என்பன 2023 இல் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இம்மத்திய ஆய்வு கூடத்தை நிறுவுதலின் ஊடாக தரத்தில் உயர்ந்த மதுபானத்தைச் சந்தைக்கு வழங்கும் இயலுமையைப் பெறலாம்..

- இலங்கை மதுவரித் திணைக்களத்தின் ஒட்டுமொத்தப் பங்களிப்பு வகிபாகத்தைக் கவனத்திற் கொள்கையில் அலுவலர்கள் அபாயகரமான அவுடதங்கள், சட்ட விரோத மதுபானங்களின் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது தொடர்ச்சியாக பல இடையூறுகள் மற்றும் விபத்துகளுக்கு முகங்கொடுக்கும் சந்தர்ப்பங்கள் பதிவாகியுள்ளன. எனவே திணைக்களத்திற்கு தொடர்பாடல் உபகரணங்கள் மற்றும் செல்லிடத் தொடர்பாடல் உபகரணங்கள் வழங்குதல் அத்தியாவசியமாக உள்ளது.

- RASED முறையின் சகல தேவைகளையும் இனங்கண்டு அம்மென்பொருள் முறையை விருத்தி செய்வதற்கு சேவை வழங்குனர் ஒருவரை இனங்காணுதல் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மொடியூலர் முறையில் மேற்கொள்ளுவதற்கு திணைக்களத்தின் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது.

- வினைத்திறன் மிக்க சேவை பொருட்டு மதுவரித் திணைக்களத்தின் சீருடை அலுவலர்களிற்கு புதிய சேவைப் பிரமாணக் குறிப்பினை அறிமுகப்படுத்துதல் அவசியமாகவுள்ளது.

### 2:2:2 சவால்கள்

- 2023 இற்கான ரூ. 217 பில்லியன் வருமான இலக்கை அடைதல், மதுபான உற்பத்திகளின் விலை உயர்வடைந்தமை, மதுசாரங்களின் உற்பத்திச் செலவு உயர்வடைந்தமை, நாட்டின் பணவீக்கம், ஆற்றல் குறைவடைந்தமை போன்ற காரணங்களால் சவாலுக்குரிய விடயமாகவுள்ளது. பீடி ஒன்றுக்கு விதிக்கப்பட்ட ரூ.2/= எனும் புதிய வரியைச் செயற்படுத்துதலின் ஊடாக 2023 இல் ரூபா 3 பில்லியன் வருமானத்தைப் பெற்றுக்கொள்ளலும் சவாலுக்குரியதாகும்.

- உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் சகல மதுபானங்களிற்கும் பாதுகாப்பு ஸ்ரிக்கரை (Fool Proof Sticker) அல்லது பாதுகாப்பு அமிசத்தினை (Digital Printing) 2022 இன் ஜனவரி மாதத்தில் ஆரம்பிக்கபட்டது. இந்த புதிய வேலைத்திட்டத்தை செயற்படுத்துவதில் ஆரம்பத்தில் எழுந்த பல்வேறு பிரச்சனைகளைத் தீர்த்து 2022 ஏப்ரல் மாதம் முதல் சகல உற்பத்திச்சாலைகளிற்கும் ஸ்ரிக்கர் ஒட்டுதல் செயற்படுத்தப்பட்டது. இச்செயன்முறையை ஒழுங்குபடுத்தி தொடர்ச்சியாக, சரியாக நடைமுறைப்படுத்துதல் திணைக்களத்திற்கு சவால் மிக்கதாகும்.

- திணைக்களத்தில் பணிபுரியும் சீருடை அலுவலர்களில், சகல தரத்திலுள்ள அலுவலர்களும் இவ்வருடத்தில் பதவியுயர்வு பெற்றுச் சென்றமையால் இரண்டாம் நிலை அலுவலர்களிற்கு கடும் பற்றாக்குறை நிலவுகிறது. விசேடமாக, 114 மதுவரிக் காவலாளர் பதவிகள் வெற்றிடமாகவுள்ளன. அதற்காக புதிதாக ஆட்சேர்ப்பு செய்ய வேண்டிய போதிலும் புதிய ஆட்சேர்ப்பு இடைநிறுத்தப்பட்டுள்ள அரசின் தீர்மானத்தின் மீது திணைக்களத்தின் செயலாற்றுகையை மேற்கொள்ளல் சவாலுக்குரியதாகும்.

- மதுபான உற்பத்தியில் பயன்படுத்தப்பட்ட வெற்றுப் போத்தல்கள் மற்றும் வெற்று பியர் ரின்கள்(பியர் கான்கள்) இனை முறையாக சேகரித்தல் மற்றும் மீள்சுழற்சிக்கு அனுப்புதல் தொடர்பில் இலங்கை மதுவரித் திணைக்களம் விசேட கவனஞ் செலுத்தி இது தொடர்பாக மத்திய சுற்றாடல் அதிகாரசபை, அதற்குரிய வெளியக நிறுவனங்களுடன் கலந்துரையாடி மதுபான விற்பனை நிலையங்களின் அருகே இரும்புக் கூடைகள் பொருத்தப்பட்டன. இங்கு சேகரிக்கப்படும் வெற்று பியர் கான்களை மீள்சுழற்சி செய்தல் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளமையால், எதிர்காலத்தில் பியர் கான் சுற்றுச் சூழலில் சேரும் அபாயம் தவிர்க்கப்படும்.

- மதுவரி வருமானத்தை அதிகரிக்கும் வகையில் மதுபானங்களின் சில்லறை விற்பனை உரிமங்களை (வெ.ம.04) புதிதாக வெளியிடுதல் தொடர்பில் சமய, சமூக, அரசியல் ரீதியான இடைஞ்சல்கள் மொத்த செயலாற்றுகையிலும் தாக்கத்தைச் செலுத்தியுள்ளது.

- ஆதரவளிப்புப் பிரிவிற்கு வாகனங்களைக் கொள்வனவு செய்வதில் உள்ள தடைகள், வாகனத்தைப் புதுப்பிப்பதற்குரிய உதிரிப்பாகங்கள் சந்தையில் பற்றாக்குறை என்பன வாகன நிர்வாகத்திற்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் புதிய சாரதிகளை ஆட்சேர்ப்புச் செய்யும் தேவைப்பாடும் பாரியளவில் நிலவுகிறது.

2:**3 நலன்புரி**

- இலங்கை மதுவரித் திணைக்களத்தில் நலன்புரிச் சங்கம் ஒன்றை அமைத்தலின் ஊடாக முழுமையான சிற்றுண்டிச்சாலை மற்றும் அலுவலர்களின் நலன்புரியை வினைத்திறனுடன் மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது.
- அரசிறை வருமான மேம்பாடு பொருட்டு அர்ப்பணிப்புடன் மதுவரித் திணைக்களத்தில் சேவை புரியும் சகல அலுவலர்களுக்கும் வெகுமதிக் கொடுப்பனவை வழங்குதற்காக நிதி அமைச்சிற்கு யோசனை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

# அத்தியாயம் - 03

## வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை

3.1 நிதிச் செயலாற்றுகைக் கூற்று

3.2 நிதி நிலைமை பற்றிய கூற்று

3.3 நிதிப் பாய்ச்சல் பற்றிய கூற்று

3.4 இலங்கை மதுவரித் திணைக்களம் - மதுவரி வெகுமதி நிதியம்

3.5 நிதி நிலைமை பற்றிய கூற்று - மதுவரி வெகுமதி நிதியம்

3.6 நிதிப் பாய்ச்சற் கூற்று - மதுவரி வெகுமதி நிதியம்

3.7 நிதிக் கூற்றுக் குறிப்புகள்

3.8 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை

3.9 நி.ஒ.208 இன் பிரகாரம் ஏனைய அமைச்சுகள்/ திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களத்திற்கு/ மாவட்ட செயலகத்திற்கு/ மாகாண சபைக்கு வழங்கப்பட்ட ஒதுக்கீடு

3.10 நிதியல்லாச் சொத்துகளை அறிக்கையிடலின் செயலாற்றுகை

# 3.1 நிதிச் செயலாற்றுகைக் கூற்று

**2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்தின் பொருட்டு நிதிச் செயலாற்றுகைக் கூற்று** ஏசிஏ-எப்.'.

| பாதீடு 2022 | | குறிப்பு | உண்மை நிலை 2022 | உண்மை நிலை 2021 | |
|---|---|---|---|---|---|
| | | | ரூ. | ரூ. | |
| - | **வருமானப் பெறுகைகள்** | | **165,227,025,349.00** | **138,674,173,166.00** | |
| - | வருமான வரி | 1 | - | - | |
| 185,036,000,000.00 | உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி | 2 | 165,227,025,349.00 | 138,674,173,166.00 | ஏசீஏ-1 |
| - | சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள் | 3 | - | - | |
| - | வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும் | 4 | - | - | |
| **185,036,000,000.00** | **மொத்த வருமானப் பெறுகைகள் (அ)** | | **165,227,025,349.00** | **138,674,173,166.00** | |
| - | **வருமானமற்ற பெறுகைகள்** | | **636,428,953.00** | **886,428,296.00** | |
| - | திறைசேரி பணிமுற்பணங்கள் | | 380,000,000.00 | 679,573,363.00 | ஏசீஏ-3 |
| - | வைப்புகள் | | 207,733,044.00 | 157,522,980.00 | ஏசீஏ-4 |
| | முற்பணக் கணக்குகள் | | 48,695,909.00 | 49,331,953.00 | ஏசீஏ-5 |
| | ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள் | | | - | |
| - | **மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)** | | **636,428,953.00** | **886,428,296.00** | |
| - | **மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)** | | **165,863,454,302.00** | **139,560,601,462.00** | |
| | **திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)** | | 163,894,015,184.00 | 138,142,330,124.00 | |
| | **தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)** | | 1,969,439,118.00 | 1,418,271,338.00 | |
| | **கழி : செலவினம்** | | | | |
| - | **மீண்டுவரும் செலவினம்** | | **1,770,977,060.00** | **1,244,517,930.00** | |
| 1,081,300,000.00 | சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள் | 5 | 1,048,170,199.00 | 976,986,009.00 | |
| 737,250,000.00 | ஏனைய பொருட்கள் சேவைகள் | 6 | 716,982,651.00 | 260,405,523.00 | ஏசீஏ-2(ii) |
| 6,000,000.00 | மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள் | 7 | 5,824,210.00 | 7,126,398.00 | |
| - | வட்டிக் கொடுப்பனவுகள் | 8 | - | - | |
| - | ஏனைய மீண்டுவரும் செலவினம் | 9 | - | - | |
| **1,824,550,000.00** | **மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)** | | **1,770,977,060.00** | **1,244,517,930.00** | |
| | **மூலதனம் செலவினம்** | | **68,247,037.00** | **114,949,465.00** | |
| 51,500,000.00 | மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பும், மேம்படுத்தலும் | 10 | 24,362,844.00 | 30,960,540.00 | |
| 143,000,000.00 | மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | 11 | 41,421,817.00 | 74,742,255.00 | |
| - | மூலதன மாற்றல்கள் | 12 | - | - | ஏசீஏ-2(ii) |
| - | நிதிச் சொத்துக்களின் கொள்வனவு | 13 | - | - | |
| 2,500,000.00 | திறன் விருத்தி | 14 | 2,462,376.00 | 9,246,670.00 | |
| - | ஏனைய மூலதனச் செலவினங்கள் | 15 | - | - | |
| **197,000,000.00** | **மொத்த மூலதனம் செலவினம் (எ)** | | **68,247,037.00** | **114,949,465.00** | |
| | **வைப்புக் கொடுப்பனவுகள்** | | 188,973,432.00 | 212,750,718.00 | ஏசீஏ-4 |
| | **முற்பணக் கொடுப்பனவுகள்** | | 42,959,371.00 | 40,135,614.00 | ஏசீஏ-5 |
| | **ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்** | | | - | |
| | **மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)** | | 231,932,803.00 | 252,886,332.00 | |
| | **மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ)** | | **2,071,156,900.00** | **1,612,353,727.00** | |
| **2,021,550,000.00** | **டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ)** | | **(101,717,782.00)** | **(194,082,389.00)** | |
| | **பணிமுற்பண இணக்க அறிக்கையின்படி மீதி** | | (102,108,741.00) | (195,860,768.00) | ஏசீஏ-7 |
| - | **டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி** | | 390,959.00 | 1,778,379.00 | ஏசீஏ-3 |
| | | | **(101,717,782.00)** | **(194,082,389.00)** | |

## 3.2 நிதி நிலைமை பற்றிய கூற்று

**ஏசீஏ-பி**

# நிதி நிலைமை பற்றிய கூற்று

**2022 டிசம்பர் 31ல் உள்ளவாறான**

**நிதி நிலைமைக் கூற்று**

| | குறிப்பு | உண்மை நிலை 2022 | 2021 |
|---|---|---|---|
| | | ரூபா | ரூபா |
| **நிதியல்லாச் சொத்துக்கள்** | | | |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம் | ஏசீஏ-6 | 1,755,263,088.00 | 1,681,654,585.00 |
| **நிதி சொத்துக்கள்** | | | |
| முற்பணக் கணக்குகள் | ஏசீஏ-5 | 155,562,043.00 | 161,298,581.00 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | ஏசீஏ-3 | 390,959.00 | 1,778,379.00 |
| **மொத்த சொத்துக்கள்** | | **1,911,216,090.00** | **1,844,731,545.00** |
| **தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு** | | | |
| திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள் | | (169,409,568.00) | (144,913,418.00) |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம் | | 1,755,263,088.00 | 1,681,654,585.00 |
| வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம் | ஏசீஏ-5பீ | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| வைப்புக் கணக்குகள் | ஏசீஏ-4 | 324,971,611.00 | 306,211,999.00 |
| தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி | ஏசீஏ-3 | 390,959.00 | 1,778,379.00 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **1,911,216,090.00** | **1,844,731,545.00** |

பக்க இலக்கம் 06 முதல் 45 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின் பக்க இலக்கம் 46 முதல் 69 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

…………

| | | |
|---|---|---|
| … ஒப்பம்……. | …… ஒப்பம்……………… | ஒப்பம்………….. |
| பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் | கணக்கீட்டு உத்தியோகத்தர் | பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர்/ பணிப்பாளர்(நிதி) |
| பெயர் : எஸ்.ஆர்.ஆட்டிகல | பெயர் : எம்.ஜே.குணசிறி | பெயர்: பி.அஜிதா சாந்தனி |
| பதவி: செயலாளர் | பதவி: மதுவரி ஆணையாளர் நாயகம் | |
| திகதி : 2023.02. | திகதி : 2023.02. | திகதி : 2023.02.23 |

## 3.3 நிதிப் பாய்ச்சல் பற்றிய கூற்று

**நிதிப் பாய்ச்சல் பற்றிய கூற்று**
**2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான**
**காசுப் பாய்ச்சல் கூற்று**

| | உண்மை | |
|---|---|---|
| | 2022<br>ரூபா | 2021<br>ரூபா |
| <u>தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்</u> | | - |
| மொத்த வரிப் பெறுகைகள் | 165,227,025,349.00 | 138,674,173,166.00 |
| கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் | - | - |
| இலாபம் | - | - |
| வருமானம் அல்லாத பெறுகைகள் | 1,778,379.00 | 25,273,362.00 |
| ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம் | 91,125,084.00 | 101,811,040.00 |
| கிடைக்கப்பெற்ற கட்டுநிதி | 380,000,000.00 | 679,573,363.00 |
| முற்பணங்களை அறவிடல் | 42,573,817.00 | 43,579,534.00 |
| வைப்புக்களின் பெறுகை | 207,733,044.00 | 157,522,980.00 |
| **செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)** | **165,950,235,673.00** | **139,681,933,445.00** |
| **<u>கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு</u>** | | |
| ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடுக் கொடுப்பனவுகள் | 1,765,793,859.00 | 1,243,628,244.00 |
| மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும் | 5,824,210.00 | - |
| ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் | 2,091,048.00 | 6,635,771.00 |
| திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம் | 163,894,015,184.00 | 138,142,330,124.00 |
| முற்பணக் கொடுப்பனவு | 37,448,523.00 | 29,788,634.00 |
| வைப்புக் கொடுப்பனவு | 188,973,432.00 | 212,750,718.00 |
| **தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)** | **165,894,146,256.00** | **139,635,133,491.00** |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)** | **56,089,417.00** | **46,799,954.00** |
| <u>முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்</u> | | |
| வட்டி | - | - |
| பங்கு இலாபம் | - | - |
| உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை | - | 19,794,100.00 |
| உப கடன்கள் மீதான அறவீடுகள் | - | - |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து ஆக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)** | **-** | **19,794,100.00** |
| **<u>கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:</u>** | | |
| கொள்வனவு அல்லது பௌதீகச் சொத்தக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு | 55,698,458.00 | 64,815,675.00 |
| **முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)** | **55,698,458.00** | **64,815,675.00** |
| **முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)** | **(55,698,458.00)** | **(45,021,575.00)** |
| **தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ)** | **390,959.00** | **1,778,379.00** |
| <u>நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்</u> | | |
| உள்ளுர்க் கடன்கள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் | - | - |
| பெற்ற நன்கொடைகள் | - | - |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)** | **-** | **-** |
| *<u>கழி - பகிர்ந்நதளிக்கப்பட்ட காசு:</u>* | | |
| உள்ளுர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| **நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)** | **-** | **-** |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)** | **-** | **-** |
| **காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ) +(ஒ)** | **390,959.00** | **1,778,379.00** |
| **ஜனவரி 01 ஆம் திகதியீலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி** | **0.00** | **0.00** |
| **டிசம்பர் 31ஆம் திகதியீலுள்ளவாறான இறுதிக் காசு மீதி** | **390,959.00** | **1,778,379.00** |

## 3.4 இலங்கை மதுவரித் திணைக்களம் - மதுவரி வெகுமதி நிதியம்

**இலங்கை மதுவரித் திணைக்களம் - மதுவரி வெகுமதி நிதியம்**

**2022 டிசம்பர் 31 ஆம் திகதி நிறைவடைந்த வருடத்திற்கான நிதி செயலாற்றுகைக் கூற்று**

**(ரூபாவில்)**

| | 2022 | 2021 |
|---|---|---|
| **வருமானம்** | - | |
| கூட்டுத் தண்டப்பணப் பெறுகை | 154,560,181 | 115,792,101 |
| சிகரட் தண்டப்பணம் | 4,986,600 | 5,318,748 |
| **மொத்த வருமானம்** | **159,546,781** | **121,110,848** |
| | | |
| **செலவு** | - | |
| வெகுமதி நிதிக் கொடுப்பனவு | 79,724,620 | 156,433,104 |
| அரசிறை வருமானத்திற்கான கொடுப்பனவுகள் - கூட்டுத் தண்டப் பண வருமானம் 15% | 23,184,027 | 17,443,815 |
| அரச வருமானத்திற்கான கொடுப்பனவு - சிகரட் தண்டப்பணம் 75% | 3,739,950 | 4,132,386 |
| புகையிலை நிதியத்திற்கான கொடுப்பனவு | 1,077,275 | 1,329,687 |
| விசேட சுற்றிவளைப்புகள் | | - |
| ஏனையவை | 99,890 | 249,000 |
| மதிப்பிறக்கம் (அட்டவணை 01) | 3,276,488 | 9,359,640 |
| உரிமதாரர்களிற்கு மீளச் செலுத்துதல் | - | 3,826,000 |
| **மொத்தச் செலவு** | **111,102,250** | **192,773,632** |
| | | |
| **மிகை / (குறைபாடு)** | **48,444,530** | **(71,662,784)** |

**தயாரித்தவர் :- ஒப்பம்**
**பரிசீலித்தவர்:- ஒப்பம்**

ஒப்பம்
**ஜி.அஜிதா சாந்தனி**
**பிரதம நிதி அலுவலர்**

# 3.5. நிதி நிலைமை பற்றிய கூற்று

**2022 டிசம்பர் 31 ஆம் திகதியன்று**

**நிதி நிலைமை பற்றிய கூற்று**

| பண அலகு ரூபாவில் | 2022 | 2021 |
|---|---|---|
| **சொத்துகள்** | - | - |
| **நடைமுறைச் சொத்துகள்** | - | - |
| மொத்தப் பெறுகைகள், கொடுப்பனவுக் கணக்குகள் | 192,517,335 | 142,637,736 |
| பெற வேண்டிய கூட்டுத் தண்டப்பணம் | 9,651,195 | 19,922,877 |
| பெற வேண்டிய சிகரட் தண்டப்பணம் | 960,400 | 282,900 |
| | **203,128,930** | **162,843,513** |
| **நடைமுறையல்லாச் சொத்துகள்** | - | - |
| காணிகளும் கட்டடங்களும்(அட்டவணை02) | 47,134,000 | 47,134,000 |
| வாகனங்கள் (அட்டவணை 03) | 808,481 | 1,077,975 |
| தளபாடங்களும் உபகரணமும் (அட்டவணை 04) | 904,357 | 860,599 |
| மின் உபகரணங்கள் (அட்டவணை 05) | 9,918 | 12,397 |
| அலுவலக உபகரணம் (அட்டவணை 06) | 11,131,732 | 13,917,665 |
| விளையாட்டு உபகரணம் (அட்டவணை 07) | 3,142 | 3,928 |
| நூலக புத்தகங்கள் (அட்டவணை 08) | 20,366 | 25,458 |
| ஏனைய உபகரணம் (அட்டவணை 09) | 3,882 | 4,437 |
| மதிப்பிறக்கச் சொத்துகளை கொள்வனவு செய்தல் | 49,687,107 | 258,908 |
| மதிப்பிறக்க ஒதுக்கீட்டு நிதியம் | 18,974,695 | 65,385,316 |
| | **128,677,682** | **128,680,683** |
| **மொத்த சொத்துகள்** | **331,806,612** | **291,524,196** |
| **பொறுப்புகள்** | - | - |
| **குறுகிய கால பொறுப்புகள்** | - | - |
| அரச வருமானத்திற்கு செலுத்த வேண்டிய கூட்டுத்தண்டப் பணம் | 1,447,679 | 2,988,432 |
| அரச வருமானத்திற்கு செலுத்த வேண்டிய சிகரட் பணம் | 720,300 | 212,175 |
| புகையிலை நிதியத்திற்கு செலுத்த வேண்டிய தொகை | 240,100 | 70,725 |
| செலுத்த வேண்டிய வெகுமதி நிதியம் | 7,238,396 | 15,136,472 |
| **நீண்ட கால பொறுப்புகள்** | - | - |
| புகையிலை நிதியத்திற்கு செலுத்த வேண்டிய நிதி | 21,440,516 | 20,437,066 |
| **தேறிய சொத்துகள்** | **300,719,620** | **252,679,326** |
| **தேறிய சொத்துகள்/பங்குகள்** | - | - |
| திரட்டிய நிதியம் | 252,775,090 | 324,342,110 |
| முந்தைய வருட சீராக்கல் | (500,000) | |
| (குறைபாடு) / மிகை | 48,444,530 | (71,662,784) |
| **மொத்தப் பங்குகள்** | **300,719,620** | **252,679,326** |

தயாரித்தவர் :- ஒப்பமிடப்பட்டது

பரிசீலித்தவர்:- ஒப்பமிடப்பட்டது

*பக்க இலக்கம் 07 முதல் 08 வரையான கணக்குத் தகவல்கள் மற்றும் பக்க இலக்கம் 18 முதல் 44 வரை உள்ளடங்கியுள்ள குறிப்புகளின் விபரமும் இந்த நிதிக் கூற்றுகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தலிற்கான பொறுப்பை நிர்வாகக் குழு கொண்டுள்ளது. 2022 தொடர்பில் திருத்திய நிதிக்கூற்றை நிர்வாகக் குழு அங்கீகரித்தது .*

ஒப்பம்

**ரோஹண சேனாரத்ன**
மதுவரி ஆணையாளர்(நிர்வாகம்)

ஒப்பம்

**பி.எச்.சி.சில்வா**
மதுவரி ஆணையாளர்(சட்ட வலுப்படுததல்)

ஒப்பம்

**ஜே.எம்.எஸ்.என்.ஜயசிங்ஹ**

மதுவரி ஆணையாளர் நாயகம்

3.6 நிதிப் பாய்ச்சற் கூற்று- மதுவரி வெகுமதி நிதியம்

**2022 டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று**
**(ரூபாவில்)**

| | 2022 | 2021 |
|---|---|---|
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | - | - |
| | | |
| **பெறுகைகள்** | - | |
| கூட்டுத்தண்டப்பணப் பெறுகை | 164,831,863 | 113,782,048 |
| சிகரட் தண்டப்பபணப் பெறுகை | 4,309,100 | 5,509,848 |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான மொத்தப் பெறுகை** | **169,140,963** | **119,291,896** |
| **கொடுப்பனவு** | - | |
| கூட்டு வெகுமதி நிதி | 87,428,382 | 144,710,346 |
| அரசிறை வருமானத்திற்கு | 27,956,604 | 21,274,479 |
| விசேட சுற்றிவளைப்பிற்கு | - | - |
| மதிப்பிறக்க ஒதுக்கீட்டு நிதியத்திற்கு(அட்டவணை 01) | 3,276,488 | 9,359,640 |
| உரிமதாரர்களிற்கு மீளக் கொடுப்பனவு | - | 3,826,000 |
| ஏனையவை | 599,890 | 249,000 |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான மொத்தக் கொடுப்பனவு** | **119,261,364** | **179,419,466** |
| **தேறிய நிதிப் பாய்ச்சல்** | **49,879,599** | **(60,127,570)** |
| | | |
| **முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்** | - | |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்** | | **-** |
| காசில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு/ குறைவு | 49,879,599 | (60,127,570) |
| காலப்பகுதியின் ஆரம்பத்தில் இருந்த காசு | 142,637,736 | 202,765,840 |
| **2022.12.31 திகதியன்று பண மீதி** | **192,517,335** | **142,637,736** |

**தயாரித்தவர்:-ஒப்பம்**

**பரிசீலித்தவர்:- ஒப்பம்**

ஒப்பம்

**ஜி.அஜிதா சாந்தனி**

**பிரதான நிதி அலுவலர்**

## 3.7 நிதியியற் கூற்றுக் குறிப்புகள்

**வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை**

| வருமானக் குறியீடு | வருமானக் குறியீட்டு விபரம் | வருமான மதிப்பீடு | | சேகரிக்கப்பட்ட வருமானம் | |
|---|---|---|---|---|---|
| | | ஆரம்ப மதிப்பீடு (ரூ.) | இறுதி மதிப்பீடு (ரூ.) | தொகை (ரூ.) | இறுதி வருமான மதிப்பீடு % ஆக |
| 1002.04.01 | மதுபானம் | 185,000,000,000.00 | 185,000,000,000.00 | 165,187,536,555.00 | 89.29 |
| 1002.06.00 | புகையிலை வரி | 36,000,000.00 | 36,000,000.00 | 39,488,794.00 | 109.69 |
| 2002.01.01 | அரச கட்டடங்களின் வாடகை | 700,000.00 | 170,000.00 | 393,870.00 | 231.69 |
| 2002.02.99 | ஏனைய வட்டி | 6,500,000.00 | 6,300,000.00 | 6,322,110.00 | 100.35 |
| 2003.01.00 | திணைக்கள விற்பனை | 1,000,000.00 | 4,000,000.00 | 8,008,575.00 | 200.21 |
| 2003.02.99 | நானாவித | 35,000,000.00 | 18,000,000.00 | 38,208,482.00 | 212.27 |
| 2004.01.00 | சமூகப் பாதுகாப்புப் பங்களிப்பு நிதி – மத்திய அரசாங்கம் | - | - | 38,192,047.00 | - |

## 3.8 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை

| ஒதுக்கீட்டு வகை | ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடு | | உண்மைச் செலவினம் (ரூ.) | பயன்படுத்தப்பட்ட ஏற்பாட்டை இறுதி ஏற்பாட்டுத் தொகையின் சதவீதம் (%) ஆக |
|---|---|---|---|---|
| | ஆரம்ப ஏற்பாடு (ரூ.) | இறுதி ஏற்பாடு (ரூ.) | | |
| மீண்டெழும் | 1,824,550,000.00 | 1,824,550,000.00 | 1,770,977,060.00 | 97.06 |
| மூலதன | 197,000,000.00 | 197,000,000.00 | 68,247,037.00 | 34.64 |

### 3.9 நி.ஒ.208 இன் பிரகாரம் ஏனைய அமைச்சுகள்/ திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களத்திற்கு/ மாவட்ட செயலகத்திற்கு/ மாகாண சபைக்கு வழங்கப்பட்ட ஒதுக்கீடு

| தொடரில. | ஒதுக்கீடு செய்யப்பட்ட அமைச்சு/திணைக்களம் | ஏற்பாட்டின் நோக்கம் | ஏற்பாடு | | உண்மைச் செலவினம் | பயன்படுத்தப் பட்ட ஏற்பாட்டை பெறப்பட்ட இறுதி ஏற்பாட்டின் சதவீதமாக (%) |
|---|---|---|---|---|---|---|
| | | | ஆரம்ப ஏற்பாடு | இறுதி ஏற்பாடு | | |
| 01 | மாவட்ட செயலகம் - அம்பாறை | கட்டடம் புதுப்பித்தல் | 133,621.00 | 133,621.00 | 105,660.00 | 79.07 |
| 02 | மாவட்ட செயலகம் - ரத்தினபுரி | கட்டடம் புதுப்பித்தல் | 837,549.97 | 837,549.97 | 837,549.97 | 100 |
| 03 | மாவட்ட செயலகம் - நுவரெலியா | கட்டடம் புதுப்பித்தல் | 166,565.96 | 166,565.96 | 135,723.50 | 81.48 |
| 04 | மாவட்ட செயலகம் - அம்பாந்தோட்டை | கட்டடம் புதுப்பித்தல் | 486,735.00 | 486,735.00 | 486,735.00 | 100 |
| 05 | மாவட்ட செயலகம் - இரத்தினபுரி | கட்டடம் புதுப்பித்தல் | 1,884,000.00 | 1,884,000.00 | 1,142,783.30 | 60.66 |
| 06 | மாவட்ட செயலகம் - கொழும்பு | கட்டடம் புதுப்பித்தல் | 2,356,590.31 | 2,356,590.31 | 2,240,875.21 | 95.09 |
| 07 | மாவட்ட செயலகம் - அனுரதபுரம் | கட்டடம் புதுப்பித்தல் | 4,258,823.99 | 4,258,823.99 | 4,218,457.05 | 99.05 |
| 08 | மாவட்ட செயலகம் - களுத்துறை | கட்டடம் புதுப்பித்தல் | 950,000.00 | 950,000.00 | 918,419.29 | 96.68 |
| 09 | மாவட்ட செயலகம் - நுவரெலியா | கட்டடம் புதுப்பித்தல் | 250,000.00 | 250,000.00 | 242,500.00 | 97 |

### 3.10 நிதியல்லாச் சொத்துகளை அறிக்கையிடலின் செயலாற்றுகை

| சொத்துகளின் குறியீடு | குறியீட்டு விபரம் | 31.12.2022 அன்று பொருட் கணக்கெடுப்பு அறிக்கையின்படி மீதி (ரூ.) | 31.12.2022 திகதிய நிதி நிலை அறிக்கையின் படி மீதி (ரூ.) | எதிர்காலத்தில் கணக்கிட வேண்டியவை | வளர்ச்சி % ஆக அறிக்கையிடல் |
|---|---|---|---|---|---|
| 9151 | கட்டடங்களும் அமைப்புகளும் | 448,902,207.71 | 448,902,207.71 | | 100% |
| 9152 | இயந்திர உபகரணங்கள் | 692,400,455.10 | 692,400,455.10 | | 100% |
| 9153 | காணிகள் | 257,325,000.00 | 257,325,000.00 | | 100% |
| 9154 | தொட்டுணர முடியாத சொத்துகள் | 3,803,200.00 | 3,803,200.00 | | 100% |
| 9155 | உயிரியல் சொத்துகள் | - | - | | - |
| 9160 | நடைபெறும் பணிகள் | 174,869,318.24 | 174,869,318.24 | | 100% |
| 9180 | குத்தகைக்கு விடப்பட்ட சொத்துகள் | 177,962,907.00 | 177,962,907.00 | | 100% |

# அத்தியாயம் - 04

## செயலாற்றுகைச் சுட்டிகள்

4.1 அறிமுகம்
4.2 நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள்
4.2.1 நிர்வாகப் பிரிவு
4.2.2 வருமானப் பிரிவு
4.2.3 சட்ட வலுப்படுத்தற் பிரிவு
4.2.4 கணக்கீட்டுப் பிரிவு
4.2.5 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு
4.2.6 மனித வளப் பிரிவு
4.2.7 தகவல் தொழில்நுட்பப் பிரிவு
4.2.8 போக்குவரத்து, ஆதரவளிப்புப் பிரிவு
4.2.9 கற்கைகள் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு
4.2.10 புள்ளிவிபரப் பிரிவு
4.2.11 வழங்கல்தொடர் ஒழுங்கமைப்புப் பிரிவு
4.2.12 சட்டப் பிரிவு

## 4.1 அறிமுகம்

2022 இற்கமைய நிதி அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்ட செயற் திட்டத்திற்கிணங்க நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள் ஒவ்வொரு பிரிவிற்கேற்பவும் தயாரிக்கப்பட்டது. 2022 இன் திருத்தஞ் செய்யப்பட்ட செயற் திட்டத்தின் அடிப்படையில் இலங்கை மதுவரித் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட வருமான இலக்கு ரூ. 185 பில்லியனாகும். இலங்கை மதுவரித் திணைக்களத்தால் ரூ. 165.2 பில்லியன் வருமானமாக திறைசேரிக்கு வழங்கப்பட்டதுடன் ரூ.5.1 பில்லியன் வரி விலக்களிப்புடன் சேர்த்து மொத்த வருமானம் ரூ.170.3 பில்லியனாகும். அது சதவீதமாக 92% என அறிக்கையிடப்பட்டுள்ளது. 2022 இல் நாடு எதிர்கொண்ட பல்வேறு நெருக்கடிகளின் மத்தியிலும் பெற்றுக்கொண்ட இந்த வளர்ச்சி சந்தோசமானதொரு விடயமாகும்

இலங்கை மதுவரித் திணைக்களத்தின் மொத்த செயலாற்றுகைக்குப் பங்களிப்புச் செய்த திணைக்களத்தின் சகல பிரிவுகளையும் கவனத்திற் கொள்கையில், சட்ட வலுப்படுத்தல் பிரிவு, சட்டப் பிரிவு ஆகிய பிரிவுகளிற்கான வளர்ச்சி 100% ஐத் தாண்டியுள்ளது என்பதை சந்தோசமாகக் குறிப்பிட முடியும். அவ்வாறே ஆறு பிரிவுகளுக்கான அதன் சதவீதம் 90% - 100% வரை உள்ளது என்பதும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும்.

நிர்வாகப் பிரிவின் செயலாற்றுகை முன்னைய வருடங்களைப் போலவே 100% செயலாற்றுகை காணப்படுவதுடன் வருடக் கணக்காக வழங்கப்படாதிருந்த அலுவலர்களின் பதவியுயர்வு மற்றும் புதிய ஆட்சேர்ப்பு என்பன குறிப்பிட்ட அளவில் 2022 இல் மேற்கொள்ளப்பட்டன. மேலும் பல்வேறு பதவிகளில் வெற்றிடங்கள் நிலவிய போதிலும், புதிதாக ஆட்சேர்ப்பு செய்வதில்லை என்ற அரச தீர்மானத்தின் மீது, அவ்வெற்றிடங்களை நிரப்ப இயலாதிருந்ததுடன் 2022 இல் நாட்டில் நிலவிய எரிபொருள், மின்சார நெருக்கடிகள் மற்றும் நாட்டில் காணப்பட்ட அசாதாரண நிலை போன்றவற்றின் மத்தியில் இத்தகைய வெற்றியை அடைந்தமை சிறப்பான விடயமாகும்.

முன்னர் குறிப்பிட்டவாறு வருமானம் சேகரிக்கும்போது பல்வேறு சிரமங்களிற்கு முகங் கொடுத்த போதிலும் திணைக்கள வரலாற்றில் 110 வருடங்களின் பின்னர் அதிகூடிய வருமானமான ரூபா 165.2 பில்லியனை திறைசேரிக்கு வரவு வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன்படி வருமானப் பிரிவின் வளர்ச்சி 92% ஐ அடைந்தமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். நிர்வாகப் பிரிவு, சட்ட வலுப்படுத்தல் பிரிவு, உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு மற்றும் சட்டப் பிரிவு என்பன தமது செயலாற்றுகையை 100% இற்கு வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளதுடன், வருமானப் பிரிவு, கணக்கீட்டுப் பிரிவு, தகவல் தொழில்நுட்பப் பிரிவு, கற்கைகள் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவின் ஆய்வு நடவடிக்கைகள், வழங்கல் தொடர் ஒழுங்கமைப்புப் பிரிவு என்பவற்றின் நிறைவேற்றுகை 100% ஐ அண்மித்ததாக நிறைவேற்றியுள்ளன.

புள்ளிவிபரப் பிரிவு, தகவல் தொழில்நுட்பப் பிரிவின் RAMIS முறைமை பற்றிய நடவடிக்கைகளின் வளர்ச்சி 75% - 89% மட்டத்தில் காணப்பட்டது

எனினும் 2022 இல் அலுவலர் பயிற்சி நடவடிக்கைகளிற்கான நிதி ஏற்பாடு போதியளவில் கிடைக்கப் பெறாத போதும் கிடைக்கப் பெற்ற சகல ஏற்பாடுகளையும் ஏனைய தலைப்புகளின் கீழ் எஞ்சிய ஏற்பாடுகளையும் பயன் படுத்தி நாட்டில் நிலவிய பல்வேறு நெருக்கடி நிலைமைகளின் மத்தியிலும் அலுவலர்களின் பயிற்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை பாராட்டப்பட வேண்டிய விடயமாகும்.

கற்கைகள் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவின் ஊடாக கள்ளைத் தரப்படுத்தல் பொருட்டு தேவையான ஆரம்ப ஆராய்ச்சி நடவடிக்கைகள் 2022 இல் ஆரம்பிக்கப்பட்டதுடன் தற்போது அந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், ஆராய்ச்சி நடவடிக்கைகள் பொருட்டு ஆய்வ கூடம் ஒன்றை அமைப்பதற்கான ஒதுக்கீடு 2022 இன் வரவ செலவுத் திட்டத்தின் ஊடாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் அந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதற்கிணங்க ஆராய்ச்சி நடவடிக்கைகளின் வளர்ச்சி 75% அளவான மட்டத்தை எட்டியிருந்தது.

எனினும், இலங்கை மதுவரித் திணைக்களத்தின் எட்டு பிரதான பிரிவுகளின் வளர்ச்சி வீதம் 90% இற்கு மேல் இருத்தல் விசேடமானதாகும். அதன் படி, இலங்கை மதுவரித் திணைக்களத்தின் ஒட்டுமொத்த செயலாற்றுகையின் உண்மை வெளியீடு எதிர்பார்த்த வெளியீட்டின் சதவீதமாக, வெற்றிகரமான உயர் வளர்ச்சியைக் காட்டுகிறது.

## 4.2 நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள் (2022 செயற் திட்ட அடிப்படையில்)

| திணைக்களத்தின் செயற்பாட்டுப் பிரிவுகள் | விசேட சுட்டிகள் | | உண்மை வெளியீடு, எதிர்பார்த்த வெளியீட்டு சதவீதமாக ( % ) | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | >100% | 90 %- 100% | 75% - 89 % | 50 % - 74 % | 0% - 50% |
| 4.2.1 நிர்வாகப் பிரிவு | நிர்வாகம் மற்றும் தாபன நடவடிக்கைகள் | | | 100% | | | |
| 4.2.2 வருமானப் பிரிவு | 2022 இன் எதிர்பார்த்த வருமானத்தை சேகரித்தல் | மதுபானம் | | 90% | | | |
| | | புகையிலை | 109% | | | | |
| 4.2.3 சட்ட வலுப்படுத்தல் பிரிவு | 5. உரிய கட்டளைச் சட்டங்களை செயற்படுத்தல் | | 128% | | | | |
| | 6. மதுவரி உரிமங்களிற்கான தொழில்நுட்ப குற்ற அறிக்கைகள் | | 127% | | | | |
| | 7. போதைப்பொருட் குற்ற அறிக்கைகள் | | | 100% | | | |
| | 8. புகையிலை தொடர்பான சுற்றிவளைப்பு இலக்குகள் | | | 100% | | | |
| 4.2.4 கணக்கீட்டு பிரிவு | 2022 வருடத்தின் சகல கணக்கீட்டு நடவடிக்கைகள் | | | 92% | | | |
| 4.2.5 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு | 2022 வருடத்தில் மேற்கொள்ள வேண்டிய உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்கள் | | | 100% | | | |
| 4.2.6 மனித வளப் பிரிவு | 3. சகல அலுவலர்களிற்கும் பயிற்சி | | | 100% | | 65% | |
| | 4. அலுவலர் மேம்பாடு | | | 100% | | 50% | |
| 4.2.7 தகவல் தொழில்நுட்பப் பிரிவு | இணையத்தளத்தை இற்றைப்படுத்தல் | | | 98% | | | |
| | புதிய வேலைத்திட்டங்களை செயற்படுத்தல் | 6. RAMIS முறைக்கு இடைவெட்டுமுகத்தின் ஊடாக தரவு வழங்கல் | | | 75% | | |
| | | 7. ASYCUDA முறை ஊடாக இணைய வசதிகள் வழங்கல் | | 100% | | | |
| | | 8. RASED முறைக்கான ஆலோசனைச் சேவைக்கு நிதி முன்மொழிவை மொரட்டுவை பல்கலைக்கழகத்திலிருந்து பெறுதல் | | 100% | | | |
| | | 9. RASED வேலைத்திட்டத்தின் SRS முதல் வரைவைத் தயாரித்தல் | | 100% | | | |
| | | 10. ஸ்ரிக்கர் வேலைத்திட்டத்தை செயற்படுத்தத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளைத் தயாரித்தல், அதன் பொருட்டு உடன்படிக்கையைச் செய்தல். | | 100% | | | |
| 4.2.8 போக்குவரத்து, ஆதரவளிப்பு பிரிவு | பிரேரிக்கப்பட்ட கட்டடங்களின் நிர்மாண நடவடிக்கைகள் | | | | | 55% | |
| | போக்குவரத்து, ஏனைய பணிகள் | | | 90% | | | |
| 4.2.9 கற்கை மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு | கற்கை நடவடிக்கைகள் | | | 90% | | | |
| | ஆராய்ச்சி நடவடிக்கைகள் | | | | 75% | | |
| 4.2.10 புள்ளிவிபரப் பிரிவு | புள்ளிவிபர நடவடிக்கைகளும் தரவு வெளியிடுதலும் | | | | 85% | | |
| 4.2.11 வழங்கல்தொடர் ஒழுங்கமைப்புப் பிரிவு | ஸ்ரிக்கர் வேலைத்திட்டம் | உள்நாடு | | 95% | | | |
| | | வெளிநாடு | | 100% | | | |
| 4.2.12 சட்டப் பிரிவு | சட்ட தேவைப்பாடுகள் | | 235.88% | | | | |
| | எதிர்பார்த்த புதிய தேர்ச்சிகள் | | | | | | 5% |

**க.வே.**: 2022.03.18 முதல் 2022.12.31 வரையான வருடம் முழுவதிலும் நாடு முழுவதும் நிலவிய எரிபொருள் நெருக்கடி, பொருளாதார நெருக்கடி மற்றும் கோவிட் 19 தொற்றுநோய் காரணமாக இலங்கை மதுவரித் திணைக்களத்தின் எதிர்பார்த்த நிறைவேற்றுகை வெளியீட்டு சதவீதமான 100% ஐ பூர்த்தி செய்ய இயலாதிருந்தது.

# அத்தியாயம் - 05

## நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகளை(SDG) அடையும் செயலாற்றுகை

### 5.1 அறிமுகம்

### 5.2 நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் அடிப்படையில் இலங்கை மதுவரித் திணைக்களத்தின் செயற்பாடுகள் மற்றும் முன்னேற்றம்

## 5.1 அறிமுகம்

நிலைபேண்தகு அபிவிருத்தி பற்றிய தேசியக் கொள்கை, 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேண்தகு அபிவிருத்தி பற்றிய சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ள நிலையான அபிவிருத்தி தொடர்பான சபையின் வழிகாட்டலின் கீழ் சகல அரச நிறுவனங்கள், கல்வியியல் நிறுவனங்கள், சிவில் சமூக அமைப்புகள் என்பன, 2030 இல் நிறைவேற்ற வேண்டிய நிலையான அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு 17 நிலையான அபிவிருத்தி இலக்குகளை நிறைவேற்றுதற்காக செயற்படுத்த வேண்டிதொரு வேலைத்திட்டமாகும். இலங்கையின் நிலையான அபிவிருத்தி பொருட்டு அரச வருமானம் சேகரிக்கும் பிரதான மற்றும் பொறுப்புவாய்ந்த நிறுவனம் ஒன்றாக இலங்கை மதுவரித் திணைக்களமானது, 2022 இன் செயற் திட்டத்தை இனங்காணுகையில் 17 நிலையான அபிவிருத்தி இலக்குகளில் பிரதானமாக 05 இலக்குகளை செயற்படுத்துவதற்கு ஒவ்வொரு பிரிவுத் தலைவர்களுடனும் கலந்துரையாடி உடன்பாடொன்று எட்டப்பட்டது. அவ்விலக்குகளாவன, இலக்கு 01, 03, 12, 16, 17 ஆகும். இது பற்றி விரிவாக ஐந்தாம் அத்தியாயத்தின் 5.2 இன் கீழ் காட்டப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிட்ட விடயங்களில் விசேடமாக சகல விதத்திலும் வறுமையை ஒழிக்கும் முதலாவது இலக்கை செயற்படுத்தும் பொருட்டு 2022 இல் எம்மால் ரூபா 165.2 பில்லியன் வருமானத்தை சேகரிக்க முடிந்ததுடன், அது இலங்கையின் ஒட்டுமொத்த மக்களின் விருத்தி பொருட்டு பொதுத் திறைசேரிக்கு வரவு வைக்கப்பட்டுள்ளது. வறுமையை ஒழிப்பதற்கு பிரதான காரணியாக பொருளாதார அபிவிருத்தியில் நேரடியாக தாக்கத்தை ஏற்படுத்தும் சட்ட விரோத அற்ககோல் மற்றும் மதுபானங்களை சமுதாயத்திலிருந்து அகற்றுதல் மிக முக்கியமானதாகும். இப்பணியில் இலங்கை மதுவரித் திணைக்களம் விசேட பங்களிப்பை வழங்குகிறது. புகையிலைப் பாவனை மனித உடலுக்குத் தீங்கு விளைவிப்பது என்பதால் புகையிலைப் பாவனையைக் கட்டுப்படுத்தும் நோக்கிலும் அரசிறை வருமானத்தை உயர்த்துவதன் ஊடாக மக்களுக்குத் தேவையான நிவாரணத்தை வழங்கும் நோக்கில் பீடிக்கு புதிய வரிக் கொள்கையை செயற்படுத்த திட்டமிடப்படுவதுடன், 2023 இல் அதனைச் செயற்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது. சுற்றிவளைப்பை மேற்கொள்வதன் மூலம் மாத்திரம் பிரச்சனைக்கு தீர்வை வழங்க முடியாது என்பதுடன் அதற்குரிய கேள்வியைக்

குறைப்பது சிறப்பானதாகும். அதற்கிணங்க, சமூக தெளிவுபடுத்தும் வர்த்தகங்கள் மற்றும் அதற்குரிய ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து பொதுசன விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டது.

வறுமைக்கும் நெருக்கடிக்கும் முகங்கொடுத்துள்ள மக்களின் நலன் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு பொருட்டு இலங்கை மதுவரித் திணைக்களம் அர்ப்பணிப்புடன் சேவையாற்றுகிறது. வருடாந்தம் மதுபானம் மற்றும் புகையிலை தொடர்பான உற்பத்திகளுக்கு வரியை அதிகரித்தல், அதன் கொள்வனவாற்றலைக் குறைப்பதுடன் அவற்றுக்கான கேள்வியையும் குறைக்கும். பொதுமக்களிடையே மதுபானம் பெறக்கூடிய வரம்புகளைக் கடுமையாக்குதலினையும் வெளியிடப்படும் சட்ட ரீதியான மதுபானங்களை முறையான தரத்தில் உற்பத்தி செய்தலினையும் இயன்றவரை மக்களை மதுபானத்தைத் தவிர்ப்பதற்காக விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துதலினையும் சூழலுக்குப் பாதிப்பை குறைப்பதற்குரிய நிறுவனங்களுடன் இணைந்து செயற்படுதலையும் அது தொடர்பான முக்கிய நடவடிக்கைகளாகக் காட்டலாம்.

மதுபான உற்பத்தி செய்யும் சகல உற்பத்தியாளர்களும் அந்நடவடிக்கைகளின் போது மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் கட்டளைகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கமைய நடவடிக்களை மேற்கொண்டு நீர்நிலைகளைத் தூய்மையாக வைத்திருப்பதற்காக பொயிலரை செயற்படுத்தும்போதும் நீரை சுத்திகரிக்கும் போதும் உரிய உள்ளூராட்சி நிறுவனங்களின் அறிவுறுத்தல்களுக்கமைய உற்பத்தியாளர்கள் செயற்படுதல் ஊக்குவிக்கப்படுகிறது. மேலும், மதுபான நுகர்வின் பின்னர் அகற்றப்படும் வெற்றுப் போத்தல்கள் மற்றும் கான்களை அந்த அந்த இடங்களிலேயே போடுவதால் சூழல் மாசு படுதலைத் தவிர்க்கும் பொருட்டு நாடு முழுவதும் உள்ள மதுபான விற்பனை நிலையங்களில் 1300 கூடைகள் பொருத்தப்பட்டன.

சகலருக்கும் நீதி வழங்கும் வகையில் கைது செய்யப்படும் தனிநபர்களுக்கு சித்திரவதை மற்றும் துன்புறுத்தலுக்கு ஆளாகாமல் இருத்தலை உறுதி செய்யும் பொருட்டு சகல சீருடை அலுவலர்களுக்கும் தொடர்ச்சியாக அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. அரச வருமானத்தைப் பாதுகாக்கும் பொருட்டு எடுக்கப்படும் சகல நடவடிக்கைகளிலும் லஞ்சம் மற்றும் ஊழலை கணிசமானளவில் குறைக்க சகல கடமைகளையும் பொறுப்புடனும் வெளிப்படைத் தன்மையுடனும் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, தொடர்ச்சியாக அலுவலர் பயிற்சிகள், லஞ்சம் மற்றும் ஊழலைத் தடுக்கும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களும் சட்ட வலுப்படுத்தல் அலுவலர்களுக்கு சமூக வன்முறையின்றி கடமையைச் செய்யத் தேவையான பயிற்சியை வழங்கவும் தொடர்ச்சியாக நடவடிக்கை எடுக்கப்பட்டது.

2030 அளவில் இலங்கை மதுவரித் திணைக்களத்தில் நிலையான அபிவிருத்தியின் முதன்மை இலக்குகளை அடைவதற்குச் சாத்தியமான சகல செயற்பாடுகளையும் மேற்கொள்வதற்கு மதுவரி ஆணையாளர் நாயகம் அடங்கலாக சகல அலுவலர்களும் அர்ப்பணிப்புடன் செயலாற்றுகின்றனர்.

## 5.2 இனங்காணப்பட்ட நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகள்

- நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகளை இனங்கண்டு 2022 இன் செயற் திட்டத்திற்கு அவ்விலக்குகளை உள்ளடக்கி தயாரிக்கப்பட்டுள்ளது.
- 2022 இற்கான நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகள் மற்றும் செயற்பாடுகள் வருமாறு.

| இலக்குகள் | குறிக்கோள்கள் | அடைவுக் குறிகாட்டி | இது வரை எய்தப்பெறுகையின் முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|---|
| | | | 0% - 49% | 50% - 70% | 75%- 100% |
| **இலக்கு - 01**<br>சகல இடத்திலும் சகல முறையிலும் வறுமையை ஒழித்தல் | ➢ வினைத்திறனுடனும் பயனுறுதியுடனும் குறிப்பிட்ட வரி சேகரித்தலின் ஊடாக நாட்டின் அபிவிருத்திக்குப் பங்களிப்பு வழங்குதல், பொருளாதார, சமூக அபிவிருத்திக்கும் உட்கட்டமைப்பு வசதி விருத்திக்கும் அவ்வரியை பொதுத் திறைசேரிக்கு உரிய காலத்தில் வரவு வைத்தல். | | | | ✓ |
| | ➢ சட்ட விரோத மதுபானங்கள் மற்றும் அபாயகரமான அவுடதங்களை வினைத்திறன் மிக்க முறையில் சட்ட வலுப்படுத்தலின் ஊடாக சமூகப் பாதுகாப்பை மேம்படுத்தல் மற்றும் வறுமையை ஒழித்தல். | | | | ✓ |
| | ➢ ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் கிராமங்களைத் தெரிவு செய்து மதுபானங்கள் மற்றும் அபாயகர அவுடதங்கள் பாவனை மற்றும் விளைவுகள் பற்றி தெளிவுபடுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக சமூக அபிவிருத்தியை ஏற்படுத்துதல். | | ✓ | | |
| | ➢ மதுபானம் மற்றும் சிகரட் உற்பத்திகளைக் கொள்வனவு செய்தலில் ஆர்வமின்மையை ஏற்படுத்தும் பொருட்டு வருடாந்த வரியை அதிகரித்தல் அல்லது விலையை அதிகரித்தலின் ஊடாக கிராமியப் பொருளாதாரத்தை மேம்படுத்துதல். | | | | ✓ |
| | ➢ பீடி உற்பத்திக்கு புதிய வரியொன்றை விதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் அதன் ஊடாக பீடிக் கொள்வனவை ஊக்குவிக்காமை மற்றும் கிடைக்கப் பெறும் வருமானத்தை அரசிறை வருமானத்தில் வரவு வைத்து மக்களுக்கு நிவாரணம் வழங்குதல் | | ✓<br>✓ | | |
| | ➢ மதுபானம், புகையிலை நுகர்வு பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களின் ஊடாக மதுபான, புகையிலை நுகர்வை குறைத்தல் அல்லது குறைக்க நடவடிக்கை எடுத்தல் | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **இலக்கு** - 03<br>எல்லோருக்கும் ஆரோக்கியமான வாழ்வைப் பேணுதல், சகல வயதினருக்கும் நல்வாழ்வை மேம்படுத்தல் | ➢ சட்டரீதியாக உற்பத்தி செய்யப்படும் மதுபானங்களின் தரத்தை உறுதிப்படுத்துவதற்கு இலங்கைத் தரநிர்ணய நிறுவகத்துடன் இணைந்து சகல மதுபானங்களுக்கும் தரங்களைத் தயாரித்தல் | | | | ✓ |
| | ➢ சுகாதார, வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு சட்ட விரோத மதுபான, புகையிலை உற்பத்தியைக் குறைத்தல் மற்றும் கட்டுப்படுத்தல் | | | | ✓ |
| | ➢ பயனுள்ள தடுப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் ஊடாக சமூகப் பாதுகாப்பை ஏற்படுத்தல் | | | | ✓ |
| | ➢ பொதுமக்களின் நல்வாழ்வு பொருட்டு சட்ட விரோத மதுபானங்கள், போதைப்பொருட்கள் தொடர்பில் சட்டவலுப்படுத்துதல் | | | | ✓ |
| | ➢ 21 வயதிலும் குறைந்த பிரிவினருக்கு மதுபான, புகையிலை உற்பத்திகளின் விற்பனையை கட்டுப்படுத்துதல் | | | | ✓ |
| | ➢ சட்ட விரோத கள் உற்பத்தியைக் கட்டுப்படுத்தும் நோக்கில் உரிய தரங்களை பனை, தென்னை, கித்துளின் பொருட்டு தயாரித்தல் | | | | ✓ |
| | ➢ மனித உயிர்கள் மதுப்பழக்கத்தால் நெருக்கடிக்குள்ளாவதைத் தடுப்பதற்கு சகல மட்டத்திலுள்ள பிரஜைகளுக்கும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துதல் | | | ✓ | |
| | ➢ பொதுமக்களின் சுகாதாரத்திற்குக் கேடு விளைவிக்கும் சூழல் மாசுபடலைத் தவிர்க்கும் பொருட்டு மதுபானம் பாவித்தபின் வீசும் போத்தல்கள், கான்களை சேகரித்து மீள் சுழற்சி செய்யும் பொருட்டு மதுவிற்பனை நிலையங்களில் கூடைகளைப் பொருத்துதல் | | | | ✓ |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **இலக்கு** - 12 நிலையான உற்பத்தி மற்றும் நுகர்வு முறைகளைப் பாதுகாத்தல். | ➢ மதுபானங்கள், புகையிலை நுகர்வைக் கட்டுப்படுத்தலுக்கு பொதுமக்களிற்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படுத்தல். | | ✓ | | |
| | ➢ சட்ட விரோத மதுபானங்களைக் கட்டுப்படுத்தும் பொருட்டு வருடாந்த தனிமனித மதுபான நுகர்வைக் கணக்கெடுத்தல் மற்றும் அதற்கிணங்க தனிநபர் மதுபான நுகர்வைக் கட்டுப்படுத்தல். | | | | ✓ |
| | ➢ வரி நிர்வகித்தலை வசதிப்படுத்தல், சந்தைக்கு பதிலீடுகள் வருதலைக் கட்டுப்படுத்தல் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பான மதுபானம் என்பன பொருட்டு பாதுகாப்பு ஸ்ரிக்கரை அறிமுகஞ் செய்தல். | | | ✓ | |
| | ➢ தரத்தில் உயர்ந்த மதுபானம். புகையிலைகளை சான்றுப்படுத்தல் பொருட்டு மதுபான உற்பத்திச்சாலைகள், புகையிலை தொடர்பான உற்பத்திச்சாலைகளை வினைத்திறனுடன் மேற்பார்வை செய்தல் | | | ✓ | |
| | ➢ சகல மதுபான உற்பத்திச்சாலைகளுக்கும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பாதுகாப்பு சான்றிதழ் மற்றும் நீரின் தூய்மை பற்றிய(பொயிலர்) சான்றிதழ் என்பன வழங்குதற்கு நடவடிக்கை எடுத்தல். | | | | ✓ |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **இலக்கு** - 16<br>நிலையான அபிவிருத்தி பொருட்டு அமைதியான, அனைத்தையும் உள்ளடக்கிய சமுகங்களை மேம்படுத்தல் மற்றும் அனைத்து மட்டங்களிலும் பயனுறுதி மிக்க, பொறுப்பு வாய்ந்த, அனைத்தையும் உள்ளடக்கிய நிறுவனங்களை கட்டியெழுப்புதல் | ➢ அபாயகரமான அவுடதங்கள், சட்ட விரோத மதுபானங்கள் மற்றும் புகையிலை உற்பத்தி தொடர்பில் பயன்மிக்க சட்ட அமுலாக்கலின் ஊடாக மக்களுக்கு அமைதியான சுற்றுச்சூழலைக் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுத்தல். | | | | ✓ |
| | ➢ சகல அலுவலர்களுக்கும் சட்டத்திற்கமைய கடமைகளை மேற்கொள்ளத் தேவையான தெளிவுபடுத்தல் மற்றும் பயிற்சியை வழங்கல். | | | | ✓ |
| | ➢ சகல அலுவலர்களும் பொறுப்புடன் நடவடிக்கை மேற்கொள்ள தேவையான சூழலை ஏற்படுத்தல். | | | | ✓ |
| | ➢ சட்டப் பிரிவினை செயற்படுத்துவதன் ஊடாக சட்டரீதியான சூழலில் கடமையை மேற்கொள்ள பொருத்தமான சுற்றுச்சூழலை ஏற்படுத்தல். | | | | ✓ |
| | ➢ சகல அலுவலர்களுக்கும் ஆகக்குறைந்தது ஒரு அலுவலருக்கு 12 மணித்தியாலம் அல்லது நிறுவனம்சார் அல்லது வெளியகப் பயிற்சியை வழங்குதல். | | | ✓ | |
| | ➢ பெண் அலுவலர்களுக்கு பதவியுயர்விற்கு சம வாய்ப்பை வழங்கல் மற்றும் ஆண், பெண் இருபாலாருக்கும் நியாயமான சம்பளத்தை பெறுதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவதன் மூலம் ஆண், பெண் வேறுபாட்டைக் கவனத்திற் கொள்ளாமை. | | | ✓ | |
| | ➢ சட்டரீதியாக உற்பத்தி செய்யப்படும் மதுபான, புகையிலைக் கைத்தொழிலிலிருந்து பெறும் வருமானத்தை தொடர்ச்சியாக விருத்தி செய்யும் பொருட்டும் பொருளாதார அபிவிருத்தி பொருட்டும் வினைத்திறனுடன் நடவடிக்கை மேற்கொள்ளலின் ஊடாக வினைத்திறன் மிக்க வேலைவாய்ப்பை உறுதி செய்தல் | | | | ✓ |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **இலக்கு** - 17<br>நிலையான அபிவிருத்தி பொருட்டு உலகளாவிய ஒத்துழைப்பைச் செயற்படுத்தலின் தேவையை வலுப்படுத்தல் மற்றும் புனர்வாழ்வு பெறுதல் | ➢ வருடாந்தம் சேகரிக்கும் மதுபான, புகையிலை வரி வருமானத்தை பொதுத் திறைசேரிக்கு முறைப்படி வழங்குதல் மற்றும் பாதுகாத்தல்<br>➢ புதிய தொழில்நுட்பத்தை இனங்காணலின் ஊடாக வருமானம் சேகரிக்கும் செயன்முறையை வினைத்திறன் மிக்கதாக்கும் பொருட்டு ERMS மற்றும் RASED முறைகளை அறிமுகஞ் செய்தல்<br>➢ உலகளவில் பிரசித்தமான பாதுகாப்பு ஏற்பாடான Fool Proof Sticker அல்லது digital printing இனைப் பயன்படுத்தி மதுவரி வருமானத்தைப் பாதுகாத்தல். | | | | ✓<br>✓<br>✓ |

# அத்தியாயம் - 06

## மனிதவள விபரம்

6.1 பதவியணி முகாமைத்துவம்

6.2 இலங்கை மதுவரித் திணைக்களத்தின் செயலாற்றுகையை மனிதவளத்தில் ஏற்படும் குறை அல்லது மிகை பாதிக்கும் முறை

6.3 வெற்றிடங்கள் பற்றிய தகவல்கள்

6.4 மனித வள அபிவிருத்தி


6.4.1. நிறுவனத்தின் செயலாற்றுகைக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் பங்களிக்கும் முறை

6.4.2. மனித வள அபிவிருத்தி – பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

### 06.1 பதவியணி முகாமைத்துவம்

| | 2022.12.31 ஆம் திகதியில் உள்ளவாறு | | |
|---|---|---|---|
| | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | தற்போதைய பதவியணி | பதவி வெற்றிடம் |
| சிரேஸ்ட | 68 | 30 | 38 |
| மூன்றாம் நிலை | 381 | 304 | 77 |
| இரண்டாம்நிலை | 1048 | 845 | 203 |
| ஆரம்பநிலை | 142 | 83 | 59 |
| **மொத்தம்** | **1639** | **1262** | **377** |


### 06.2 இலங்கை மதுவரித் திணைக்களத்தின் செயலாற்றுகைக்கு மனிதவளத்தில் ஏற்படும் குறை அல்லது மிகை பாதிக்கும் முறை.




சிரேஸ்ட மட்டப் பதவிகளில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு 2022.09.01 ஆம் திகதி 11 மதுவரி அத்தியட்சகர்களிற்கு பதவியுயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. சட்ட அலுவலர் பதவியில் நிலவிய வெற்றிடத்திற்கு புதிய அலுவலர்ஒருவரை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நிதி அமைச்சின் அங்கீகாரம் கிடைக்கப் பெறவில்லை.

2022 இல் மூன்றாம் நிலை பதவி வெற்றிடங்களை நிரப்புதலின் கீழ் 21 பிரதான மதுவரிப் பரிசோதகர்களை ஆட்சேர்ப்புச் செய்ய அங்கீகாரம் பெறப்பட்டது. அதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டதுடன் ஆட்சேர்ப்பிற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், மதுவரிப் பரிசோதகர் பதவியில் நிலவும் வெற்றிடத்தை நிரப்பும் பொருட்டு திறந்த ஆட்சேர்ப்பின் கீழ் 2022.03.11 ஆம் திகதி 39 அலுவலர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர்.

இரண்டாம் நிலைப் பதவிகளில் 36 மதுவரி சார்ஜன் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்காக அலுவலர்களுக்கு பதவியுயர்வு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.




அரச செலவினங்களைக் கட்டுப்படுத்தலின் கீழ் புதிய ஆட்சேர்ப்பிற்கு அனுமதி வழங்கப்படவில்லை என்பதுடன் பணிக்கு போதிய அலுவலர் இல்லாமை காரணமாக திணைக்களப் பணிகள் பெருமளவில் தேக்கமடைந்துள்ளன. அலுவலர்களுக்கு கண்டுபிடிப்பு இலக்குகளை வழங்கலும் அலுவலர் எண்ணிக்கை குறைவடைந்தமை காரணமாக சிரமத்திற்கு உள்ளாக்கப் பட்டுள்ளதுடன் திணைக்களத்தின் போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளும் இதனால் நேரடியாகப் பாதிப்படைந்துள்ளன.

மேலும், 2022 இல் திணைக்களம்சார் பதவி வகித்த 242 அலுவலர்களிற்காக 11 வினைத்திறன் தடை காண் பரீட்சைகள் நடத்தப்பட்டதுடன், 954 அலுவலர்களுக்கு சம்பள ஆண்டேற்றமும் வழங்கப்பட்டது. அத்துடன், நீண்ட காலமாக காணப்பட்ட திணைக்களம்சார் அலுவலர்களின் ஒழுக்காற்று விசாரணைக் கோப்புகளை நிறைவு செய்ய முடிந்ததுடன் 2022 இல் ஒழுக்காற்று விசாரணை நிறைவு பெற்ற கோப்புகளின் எண்ணிக்கை 11 ஆகும்.

## 6.3 வெற்றிடங்கள் பற்றிய தகவல்கள் - 2022

| பதவி | வெற்றிட ங்களின் எண்ணிக் கை | 2022.12.31 ஆம் திகதியன்று நிலைமை | வெற்றிடம் நிலவிய காலம் |
|---|---|---|---|
| மதுவரி ஆணையாளர் நாயகம் | 1 | இப்பதவி வகித்த திரு.எம்.ஜே.குணசிறி அவர்கள் 2022.12.31 முதல் ஓய்வு பெற்றார். | 01 நாள் |
| மேலதிக மதுவரி ஆணையாளர் நாயகம் (வருமான நடவடிக்கை மற்றும் சட்ட வலுப்படுத்தல்) | 1 | இப்பதவிக்கு நியமிப்பதற்கு ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் பிரகாரம் தகைமை வாய்ந்த ஒருவர் இன்மையால் 2020.12.11 ஆம் திகதி முதல் திரு.எம்.டி.எம்.டபி.கே.திசானாயக்க இப்பதவியின் கடமை மேவுகை அலுவலராக நியமிக்கப்பட்டார். மதுவரி ஆணையாளர் திரு.எம்.டி.எம்.டபி.கே.திசானாயக்க 2022.12.31 ஆம் திகதி ஓய்வு பெற்றுச் சென்றமையால் 2022.12.31 முதல் மதுவரி ஆணையாளர் திரு.கபில குமாரசிங்ஹ இப்பதவியில் கடமை மேவுகை பொருட்டு நியமிக்கப்பட்டார். | 03 வருடங்கள் |
| பிரதான நிதி அலுவலர்* | | பிரதம கணக்காளர் திருமதி ஜி.ஏ.சாந்தனி 2021.12.01 முதல் இப்பதவியில் முழுநேரப் பதில் கடமை பொருட்டு நியமிக்கப்பட்டார். | 01 வருடம் 05 மாதங்கள் |
| மதுவரி ஆணையாளர் (சமூகப் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி) | 1 | 2019.02.08 ஆம் திகதி முதல் இப்பதவியில் வெற்றிடம் நிலவியதுடன் 2021.07.20 ஆம் திகதி முதல் மதுவரி ஆணையாளர் திரு.கபில குமாரசிங்ஹவினால் கடமை மேவுகை செய்யப்பட்டதுடன் 2022.12.31 முதல் பிரதி மதுவரி ஆணையாளர் திரு.பி.எச்.சி. சில்வாவினால் இப்பதவியில் கடமை மேவுகை செய்யப்படுகிறது. | 04 வருடங்கள் |
| மதுவரி ஆணையாளர் (சட்ட வலுப்படுத்தல்) | 1 | இப்பதவி வகித்த மதுவரி ஆணையாளர் திரு.கபில குமாரசிங்ஹ 2022.12.31 முதல் ம.ஆணையாளர்(வருமான, நடவடிக்கை) பதவிக்கு நியமிக்கப்பட்டமையால் பிரதி மதுவரி ஆணையாளர் திரு.பி.எச்.சி. சில்வா இப்பதவியில் கடமை மேவுகை பொருட்டு நியமிக்கப்பட்டார். | 01 நாள் |
| பிரதி மதுவரி ஆணையாளர் (நிர்வாகம்) | 1 | திருமதி.எச்.ஜி.கே.தீபசிகா இடமாற்றம் பெற்றுச் சென்றமையால் 2021.10.28 ஆம் திகதி முதல் இப்பதவியில் வெற்றிடம் நிலவியது. | 01 வருடமும் 02 மாதங்களும் |
| பிரதி மதுவரி ஆணையாளர் (மனித வளங்கள்) | 1 | 2018 இல் ஏற்படுத்தப்பட்ட இப்பதவியில் வெற்றிடம் நிலவியதுடன், 2022.12.31 ஆம் திகதி முதல் உதவி மதுவரி ஆணையாளர் திரு.ஆர்.எஸ்.பி.ஏ.கே. ரத்னாயக்க கடமை மேவுகை பொருட்டு நியமிக்கப்பட்டார். | 04 வருடங்கள் |
| பிரதி மதுவரி ஆணையாளர் (ஆதரவளிப்பு) | 1 | 2021.11.29 ஆம் திகதி முதல் வெற்றிடம் நிலவியதுடன உதவி மதுவரி ஆணையாளர் திரு.ஏ.ஏ.ஏ.உபுல் குமார 2022.12.31 வரை இப்பதவியில் கடமை மேவுகை அலுவலராக நியமிக்கப்பட்டார். பின்னர் 2022.12.31 முதல் உதவி மதுவரி ஆணையாளர் திரு.ஆர்.எஸ்.பி.ஏ.கே. ரத்னாயக்க இப்பதவியில் பதில் கடமை பொருட்டு நியமிக்கப்பட்டார். | 01 வருடம் 01 மாதம் |

| | | | |
|---|---|---|---|
| பிரதி மதுவரி ஆணையாளர் கற்கைகள் மற்றும் ஆராய்ச்சி) | 1 | இப்பதவி வகித்த பிரதி மதுவரி ஆணையாளர் திரு.பி.எச்.சி.சில்வா 2022.12.31 முதல் ம.ஆணை.(சட்ட வலுப்படுத்தல்) பதவிக்கு நியமிக்கப்பட்டமையால் இப்பதவியின் கடமை மேவுகை பொருட்டு திரு.ஏ.ஏ.ஏ.உபுல் குமார 2022.12.31 முதல் நியமிக்கப்பட்டார். | 01 நாள் |
| பிரதி மதுவரி ஆணையாளர் (சமூகப் பாதுகாப்பு) | 1 | 2018 முதல் வெற்றிடம் நிலவியதுடன் 2021.07.20 முதல் 2022.12.30 வரை பிரதி மதுவரி ஆணையாளர் திரு.பி.எச்.சி.சில்வா இனால் இப்பதவியின் கடமை மேவுகை மேற்கொள்ளப்பட்டது. | 04 வருடங்கள் |
| பிரதி மதுவரி ஆணையாளர் (வழங்கல் தொடர் ஒழுங்கமைப்பு மற்றும் தகவல் தொழில்நுட்பம்) | 1 | இப்பதவியில் கடமை மேவுகை புரிந்த உதவி மதுவரி ஆணையாளர் திரு.ஆர்.எம்.ரத்னாயக்க 2022.12.31 முதல் ஓய்வு பெற்றமையால் உதவி மதுவரி ஆணையாளர் திரு.சி.ஜே.ஏ.வீரக்கொடி 2022.12.31 முதல் இப்பதவியின் கடமை மேவுகை மேற்கொள்கிறார். | 02 வருடங்கள் 03 மாதங்கள் |
| பிரதி மதுவரி ஆணையாளர் (சட்ட வலுப்படுத்தல்) | 1 | இப்பதவியில் கடமை மேவுகை புரிந்த பிரதி மதுவரி ஆணையாளர் திரு.ஏ.எம்.ஜே.அதிகாரி 2022.12.31 ஓய்வு பெற்றமையால் 2022.12.31 முதல் உதவி மதுவரி ஆணையாளர் திரு.ஏ.ஏ.ஏ.உபுல் குமார பதில் கடமை பொருட்டு நியமிக்கப்பட்டார். | 01 நாள் |
| பிரதி மதுவரி ஆணையாளர் (வருமான, உரிமம்) | 1 | இப்பதவியில் கடமை புரிந்த பிரதி மதுவரி ஆணையாளர் திரு.ஆர்.எம்.ரத்னாயக்க 2022.12.31 முதல் ஓய்வு பெற்றமையால் உதவி மதுவரி ஆணையாளர் திரு.கே.தர்மசீலன் 2022.12.31 முதல் இப்பதவியில் பதிற் கடமை பொருட்டு நியமிக்கப்பட்டார். | 01 நாள் |
| பிரதி மதுவரி ஆணையாளர் (சட்டம்) | 1 | இப்பதவியை வகித்த திரு.ஏ.எம்.ஜே.அதிகாரி 2022.12.31 ஆம் திகதி முதல் ஓய்வு பெற்றதுடன் 2022.12.31 ஆம் திகதி முதல் உதவி மதுவரி ஆணையாளர் திரு.சி.ஜே.ஏ.வீரக்கொடி இப்பதவியின் பதிற் கடமை பொருட்டு நியமிக்கப்பட்டார். | 01 நாள் |
| கணக்காளர் | 1 | திருமதி.ஆர்.பி.எஸ்.பிரியதர்ஸனி 2021.07.01 ஆம் திகதி இடமாற்றம் பெற்றுச சென்றமையால் இவ்வெற்றிடம் ஏற்பட்டதுடன் வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களத்தின் கணக்காளர் திரு.டபி.ஏ.டி.பி.விஜேசிங்ஹ இப்பதவியில் பதிற் கடமை பொருட்டு நியமிக்கப்பட்டார். | 01 வருடம் 05 மாதங்கள் |
| உதவி மதுவரி ஆணையாளர் | 7 | 2022 இல் உதவி மதுவரி ஆணையாளர்கள் ஓய்வு பெற்றுச் சென்றமையால் ஏற்பட்ட வெற்றிடங்கள் | |
| | | 1. திரு.பி.ஏ.தயாரத்ன - 2022.12.31<br>2. திரு.எம்.எம்.யு.பி.செனவிரத்ன - 202212.31<br>3. திரு.பி.என்.ஆர்.ஜயவிக்ரம - 2022.12.31<br>4. திரு.என்.சுசாதரன் - 2022.12.31 | 01 நாள் |

| | | | |
|---|---|---|---|
| உதவிப் பணிப்பாளர் (தகவல் தொழில்நுட்பம்) | 1 | இப்பதவிக்கு அலுவலர் ஒருவரை நியமிக்குமாறு நிதி அமைச்சின் ஊடாக அரச நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. | 06 வருடங்கள் |
| மதுவரி அத்தியட்சகர் | 16 | 2022 இல் மதுவரி அத்தியட்சகர்கள் ஓய்வு பெற்றுச் சென்றமையால் ஏற்பட்ட வெற்றிடங்கள் | |
| | | 1. திரு.கே.ஜி.எல்.பெரேரா - 2022.02.11 | 10 மாதங்கள் |
| | | 2. திரு.எச்.எச்.டி.ஜயவர்தன - 2022.12.31<br>3. திரு.எஸ்.மதன்மோகன் - 2022.12.31<br>4. திரு.ஆர்.ஏ.டி.இந்திரநாத் - 2022.12.31<br>5. திரு.எம்.சேனாரத்ன - 2022.12.31<br>6. திரு.டபி.எஸ்.ஆர்.எப்.பெர்னான்டோ - 2022.12.31 | 01 நாள் |
| சட்ட அலுவலர் | 1 | இப்பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு அரச சேவைகள் ஆணைக்குழுவின் ஊடாக அலுவலர் ஒருவர் பெயரிடப்பட்டுள்ளதுடன் அவ்வலுவலரை ஆட்சேர்ப்புச் செய்ய நிதி அமைச்சின் அனுமதி கிடைக்கப் பெறவில்லை. | 03 வருடங்கள் |

### 6.4 மனித வளங்கள் அபிவிருத்தி

இலங்கை மதுவரித் திணைக்களத்தின் மனித வளங்கள் பிரிவின் நடவடிக்கைகளாக, திணைக்களத்தின் மனிதவளங்களின் அறிவுத் தேர்ச்சி மற்றும் திறன் வளர்ச்சியை மேம்படுத்துதலையும் நிறுவனத்தினதும் தனிநபரினதும் அபிவிருத்தியை மேம்படுத்தலையும் சரியாக ஒழுங்கமைத்தலாகும். இப்பணியை மேற்கொள்ளும் பொருட்டு மனித வளப் பிரிவு மதுவரி ஆணையாளர் ஒருவரினதும் பிரதி மதுவரி ஆணையாளர் ஒருவரினதும் நேரடி மேற்பார்வையின் கீழ் செயற்படுகிறது. மதுவரித் திணைக்களத்தின் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளும் பொருட்டு குருணாகலை மாவட்டத்தில் மதுவரிப் பயிற்சிக் கல்லூரி ஒன்று பயன்படுத்தப்படுவதுடன் தலைமை அலுவலகத்தின் கேட்போர் கூடமும் வெளியக நிறுவனங்களிலுள்ள நிலையங்களும் பயன்படுத்தப்படுகின்றன.

2022 இற்காகத் தயாரிக்கப்பட்ட செயற் திட்டத்தின் பிரகாரம் சகல சீருடை அலுவலர்கள், நாடளாவிய சேவை மற்றும் இணைந்த சேவை அலுவலர்களிற்கு ஆகக்குறைந்தது ஒரு அலுவலருக்கு 12 மணித்தியாலப் பயிற்சியை வழங்கத் தீர்மானிக்கப்பட்டது. எனினும் கோவிட் 19 தொற்றுநோய், நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடிகள் என்பன காரணமாக ஏற்பட்ட ஒதுக்கீடுகளின் மட்டுப்படுத்தலின் கீழ் அவ்விலக்கை அடைய முடியாத போதிலும் தேவையான பயிற்சிகளை கணிசமானளவில் மேற்கொள்ள இயலுமாக இருந்தது. 2022 இல் மனித வளப் பிரிவின் நேரடித் தலையீட்டின் கீழ் 11 பயிற்சித் திட்டங்கள் நடத்தப்பட்டதுடன் அதில் 534 அலுவலர்கள் பங்குபற்றியிருந்தனர். அதற்கான செலவு ரூ. 3,649,682.79 ஆகும். ஏற்பாடு மட்டுப்படுத்தலினால் சில பயிற்சித் திட்டங்களிற்கு பயிற்சி பெறுநராலேயே கற்கை நெறிக் கட்டணம் செலுத்தப்பட்டதுடன் சில பாட நெறிகளிற்கு தொழிற் சங்கங்களின் தலையீட்டின் கீழ் மேற்கொள்ளப்பட்டன.

2022 இல் நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் புதிய மதுவரிப் பரிசோதகர்களை ஆட்சேர்ப்பதற்குரிய வதிவிடப் பயிற்சி நெறி, உற்பத்திச்சாலைகள், வடிசாலைகள், குதங்கள் மற்றும் போத்தல் கள் உற்பத்திச்சாலைகளில் இணைக்கப்பட்ட மதுவரி நிலையப் பொறுப்பதிகாரிகளின் பயிற்சி, புகையிலை மற்றும் மதுபானப் பாவனையைக் கைவிடுதற்கான உளவியல் ஆலோசனைப் பயிற்சி நெறி, புகையிலை மற்றும் அற்ககோல் பற்றிய தேசிய அதிகாரசபைச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கான பயிற்சி, தமிழ் மொழித் தேர்ச்சி பற்றிய பயிற்சி நெறி, முறைப் பகுப்பாய்வு பற்றிய சர்வதேசப் பயிற்சி, அலுவலக உபகரணங்களை நிர்வகித்தல் பற்றிய பயிற்சி, பிரதி மதுவரி ஆணையாளர் பதவிக்கு பதவியுயர்த்துதல் தொடர்பான பயிற்சி, போதைப் பொருட்களின் சுற்றிவளைப்பு பற்றிய M Cash மற்றும் Easy Cash பகுப்பாய்வு பற்றிய பயிற்சி போன்ற பல பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தி அலுவலர்களிற்கு அறிவை ஊட்டி மனித வள அபிவிருத்தியின் பொருட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

### 6.4.1 நிறுவனத்தின் செயலாற்றுகையில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் பங்களிக்கும் முறை

ஏதேனும் நிறுவனம் ஒன்றின் முக்கிய வளமாக இனங்காணப்படுவது மனித வளமாகும். அந்த நிறுவனத்தின் நோக்கங்களை நிறைவேற்றுதற்கு மனித வளப் பிரிவு பொறுப்பாகவுள்ளது. நிறுவன நோக்கங்களைப் போன்றே பணியாளர் அபிலாசைகளையும் நிறைவேற்றும் பொருட்டு பணியாளர் பயிற்சி மற்றும் பணியாளர் மேம்பாடு என்பன அத்தியாவசிய மானவையாகக் கருதப்படுகிறது. பணியாளரின் வினைத்திறன் மற்றும் செயல்திறனை மேம்படுத்துவதற்கு பணியாளரின் தன்னம்பிக்கையை ஏற்படுத்துவதை பணியாளர் பயிற்சியின் ஊடாக எதிர்பார்க்கப்படுவதுடன், பணியாளரின் எதிர்கால செயல்திறன் வளர்ச்சிக்கு பணியாளரின் பொது இயலுமை விருத்தியின் மூலமாக எதிர்பார்க்கப்படுகிறது. இதன் ஊடாக அறிவுத் தேர்ச்சி, எண்ணக்கரு இற்றைப்படுத்தப்படல், பணியாளர் செயலாற்றுகை மற்றும் பணியாளர் வெளியீட்டைக் குறைத்தல், வேலைத் திருப்தியை உயர்த்துதல், பதவியுயர்விற்கான சந்தர்ப்பத்தை விரிவுபடுத்தல் ஆகிய பிரதி இலாபங்களை பயிற்சி மற்றும் விருத்தியின் மூலம் ஏற்படுத்தலாம். இலங்கை மதுவரித் திணைக்களத்தின் குறிக்கோள் மற்றும் நோக்கங்களை வினைத்திறன் மிக்க முறையிலும் பயனுறுதி மிக்க முறையிலும் மனித வளத்தைப் பேணும் பொருட்டு தேவையான பயிற்சிகள் மற்றும் விருத்திக்காக மனித வளப் பிரிவு நேரடிப் பங்களிப்பை வழங்குகிறது.

கோவிட் 19 நோயின் தாக்கம் 2022 இலே குறிப்பிடத்தக்க மட்டத்தில் காணப்பட்டதுடன், நிலவிய அரசியல், பொருளாதார நெருக்கடிகளின் தாக்கத்தினால் ஓதுக்கீடுகள் மட்டுப்படுத்தப்பட்டமை காரணமாக திட்டமிட்ட பல பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்த இயலவில்லை. இதன் விளைவாக 2022 இல் மனித வளப் பிரிவிற்கு ஒதுக்கப்பட்ட ஏற்பாடு ரூ.2.5 மில்லியனாக குறைவடைந்திருந்தது. எனினும் 2022 ஆம் வருட இறுதியில் ஏறத்தாழ ரூபா 3.7 மில்லியனை பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் பொருட்டு செலவளிக்க முடிந்தமை மனித வளப் பிரிவு பெற்ற சிறப்பான அடைவாகும். எவ்வாறாயினும் ஏற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டமையின் மீது வெளியக நிறுவனங்களால் இலவசமாக நடத்தப்படும் பயிற்சிகள் தொடர்பில் கவனஞ் செலுத்தப்பட்டு அப்பயிற்சிகளில் அலுவலர்களை இணைக்க மனித வளப் பிரிவு நடவடிக்கை எடுத்தது. மேலும், அலுவலர்களினதும் தொழிற் சங்கங்களினதும் பங்களிப்புடன் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஒருங்கிணைப்பதற்கு மனித வளப் பிரிவு நடவடிக்கை எடுத்தது.

2022 இல் 11 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டதுடன் அதில் 534 அலுவலர்கள் பங்குபற்றினர். புதிய மதுவரிப் பசோதகர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான வதிவிடப் பயிற்சி நெறி மனித வளப் பிரிவால் மேற்கொள்ளப்பட்ட பிரதான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் என்பதுடன் புகையிலை மற்றும் அற்ககோல் பற்றிய தேசிய அதிகார சபையால் நடத்தப்பட்ட புகையிலை, அற்ககோல் பாவனையை கைவிடுவதற்கான உளவியல் ஆலோசனைப் பயிற்சி நெறி, புகையிலை மற்றும் அற்ககோல் பற்றிய தேசிய அதிகாரசபைச் சட்டத்தை அமுலாக்குதல் பற்றிய பயிற்சியை மதுவரித் திணைக்கள அலுவலர்களுக்கு இலவசமாக வழங்க முடிந்தமை விசேடமாகக் குறிப்பிட வேண்டிய விடயமாகும். மனித வளப் பிரிவால் நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு.

### 6.4.2 மனித வள அபிவிருத்தி - பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

| தொடரில. | நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | பயிற்சி பெற்ற பதவியினர் எண்ணிக்கை | கால அளவு | மொத்த முதலீடு (ரூ.) | வெளியீடு/பெற்ற அறிவு |
|---|---|---|---|---|---|
| 01 | புதிதாக மதுவரிப் பரிசோதகர் ஆட்சேர்ப்பிற்கான வதிவிடப் பயிற்சி நெறி. | 38 | 2 ½ மாதங்கள் | ரூ.3,463,922.79 | மதுவரிப் பரிசோதகர் பதவிக்குரிய மதுவரித் திணைக்களத்தின் நோக்கம், கட்டளைகள், மதுவரி அறிவித்தல்கள், நடைமுறைச் சட்டங்கள், நெறியாளுகைச் சட்டங்கள், தாபன விதிக் கோவை, நிதி ஒழுங்குவிதி, அலுவலக ஆவணங்கள் மற்றும் தலைமைத்துவம் பற்றிய பயிற்சி |
| 02 | உற்பத்திச்சாலைகளின் கடமை பொருட்டு இணைக்கப்பட்ட மதுவரி நிலையப் பொறுப்பதிகாரிகளின் பயிற்சி | 19 | ஒரு நாள் | ரூ27,450.00 | மதுபான உற்பத்திச்சாலைகள் பற்றிய ஆவணங்களைப் பேணலும் மேற்பார்வையிடலும் தொடர்பான அறிவு |
| 03 | வடிசாலைகள், குதங்கள், போத்தல் கள்ளு உற்பத்திச்சாலைகளின் பணிகள் பொருட்டு இணைக்கப்பட்ட மதுவரி நிலையப் பொறுப்பதிகாரிகளின் பயிற்சி | 18 | ஒரு நாள் | ரூ.28,420.00 | வடிசாலைகள், குதங்கள், போத்தல் கள்ளு உற்பத்திச்சாலைகள் பற்றிய ஆவணங்களைப் பேணலும் மேற்பார்வையிடலும் தொடர்பான அறிவு |
| 04 | புகையிலை மற்றும் அற்ககோல் பாவனையை கைவிடுவதற்கான உளவியல் ஆலோசனைப் பயிற்சி நெறி | 13 | 10 நாட்கள் | புகையிலை மற்றும் அற்ககோல் பற்றிய தேசிய அதிகாரசபையால் (NATA) இலவசமாக நடத்தப்பட்டது. | புகையிலை மற்றும் அற்ககோல் பாவனையை கைவிடுவதற்கான உளவியல் ஆலோசனை பற்றிய அறிவு |
| 05 | புகையிலை மற்றும் அற்ககோல் பற்றிய தேசிய அதிகாரசபைச் சட்டத்தை அமுலாக்கல் தொடர்பான பயிற்சி | 20 | ஒரு நாள் | புகையிலை மற்றும் அற்ககோல் பற்றிய தேசிய அதிகாரசபையால் (NATA) இலவசமாக நடத்தப்பட்டது. | புகையிலை மற்றும் அற்ககோல் பற்றிய தேசிய அதிகாரசபைச் சட்டத்தின் பிரகாரம் வழக்குத் தொடுத்தல், நடைமுறை விடயங்கள் பற்றிய அறிவைப் பெற்றுக்கொள்ளல் |
| 06 | தமிழ் மொழித் தேர்ச்சி பற்றிய பயிற்சிநெறி | 200 | 200 மணித்தியாலம் | தொழிற் சங்கத்தால் பயிற்சிக் கட்டணம் செலுத்தப்பட்டது. | தமிழ் மொழி பற்றிய தேர்ச்சி |
| 07 | தமிழ் மொழித் தேர்ச்சி பற்றிய பயிற்சிநெறி | 100 | 150 மணித்தியாலம் | 112,500.00 | தமிழ் மொழி பற்றிய தேர்ச்சி |
| 08 | முறைப் பகுப்பாய்வு பற்றிய சர்வதேசப் பயிற்சி | 01 | 02 நாட்கள் | இந்திய அரசால் இலவசமாக நடத்தப்பட்டது. | முறைப் பகுப்பாய்வு பற்றிய அறிவு. |
| 09 | அலுவலக உபகரணங்கள் நிர்வகித்தல் பற்றிய பயிற்சி | 02 | 02 நாட்கள் | ரூ.7,500.00 | அலுவலக உபகரணங்கள் நிர்வகித்தல் பற்றிய அறிவு |
| 10 | பிரதி மதுவரி ஆணையாளர் பதவிக்கு பதவியுயர்த்தல் பற்றிய பயிற்சிநெறி | 23 | 72 மணித்தியாலம் | பங்குபற்றுனர்களால் பயிற்சிக் கட்டணம் செலுத்தப்பட்டது. | முற்பணக் கணக்கைத் தயாரித்தல் பற்றிய அறிவைப் பெறுதல். |
| 11 | போதைப்பொருள் சுற்றிவளைப்பு பற்றிய M Cash மற்றும் Easy Cash பகுப்பாய்வு பற்றிய பயிற்சி | 100 | ஒரு நாள் | ரூ.9,890.00 | M Cash மற்றும் Easy Cash பயன்படுத்தி கடத்தல்காரர் செயற்படும் முறை பற்றிய அறிவு |
| **பயிற்சியளிக்கப்பட்ட அலுவலர் எண்ணிக்கை** | | **534** | | **ரூ.3,649,682.79** | |

# அத்தியாயம் - 07

## இணக்கப்பாட்டு அறிக்கை

**7.1 நிறுவனத்தின் செயலாற்றுகைக்கு பங்களிக்கும் முறை பற்றிய இணக்கப்பாட்டு அறிக்கை**

## அத்தியாயம் 07 - இணக்கப்பாட்டு அறிக்கை

| இல. | ஏற்புடைய தேவைப்பாடு | இணக்கப்பாட்டுநிலை (இணக்கமானது/ இணக்கமற்றது) | இணக்கமற்றதாயின் அதற்கான சிறு விளக்கம் | எதிர்காலத்தில் இணக்கமற்றமையை தவிர்ப்பதற்கு முன்வைக்கும் தீர்வு நடவடிக்கைகள் |
|---|---|---|---|---|
| **01** | **கீழே குறிப்பிட்ட நிதி அறிக்கைகள்/ கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.** | | | |
| 1.1 | வருடாந்த நிதி அறிக்கைகள் | இணக்கமானது | | |
| 1.2 | அரச அலுவலர்களின் முற்பணக் கணக்குகள் | இணக்கமானது | | |
| 1.3 | வணிக, உற்பத்தி முற்பணக் கணக்குகள் (வர்த்தக உற்பத்திக் கணக்குகள்) | ஏற்புடையதன்று. | 1. இலங்கை மதுவரித் திணைக்களத்திற்கு இக்கணக்குகள் ஏற்புடையதன்று. | |
| 1.4 | களஞ்சிய முற்பணக் கணக்குகள் | ஏற்புடையதன்று. | 2. இலங்கை மதுவரித் திணைக்களத்திற்கு இக்கணக்குகள் ஏற்புடையதன்று. | |
| 1.5 | சிறப்பு முற்பணக் கணக்குகள் | ஏற்புடையதன்று. | 3. இலங்கை மதுவரித் திணைக்களத்திற்கு இக்கணக்குகள் ஏற்புடையதன்று. | |
| 1.6 | ஏனையவை | ஏற்புடையதன்று. | 4. இலங்கை மதுவரித் திணைக்களத்திற்கு இக்கணக்குகள் ஏற்புடையதன்று. | |
| **02** | **புத்தகங்கள், பதிவுகளைப் பேணுகை (நி.ஒ.445)** | | | |
| 2.1 | அரச நிர்வாகச் சுற்றறிக்கை இல. 267/2018 இன் படி நிலையான் சொத்துகளின் பதிவேடு புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.2 | ஆள்சார் வேதனாதிகள் பதிவேடுகள்/ தனிநபர் ஊதிய அட்டைகள் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.3 | கணக்காய்வு வினாக்கள் பதிவேடு புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.4 | உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் பதிவைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.5 | சகல மாதாந்த கணக்கு சுருக்கங்கள் (CIGAS) தயாரிக்கப்பட்டு உரிய தினத்தில் பொதுத் திறைசேரிக்கு சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| 2.6 | காசோலைகள், காசுக் கட்டளைகள் பதிவேடு புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.7 | பொருட் பதிவேடு புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.8 | இருப்புப் பதிவேடு புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 2.9 | இழப்புப் பதிவேடு புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.10 | பொறுப்புகள் பதிவேடு புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.11 | அடிக்கட்டைப் புத்தகங்களின் (GAN20) பதிவேடு புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| **03** | **நிதி கட்டுப்பாட்டுக்கான பணிகளை ஒப்படைத்தல் (நி.ஒ. 135)** | | | |
| 3.1 | நிதி அதிகாரங்கள் நிறுவனத்திற்குள் பகிரப்பட்டன | இணக்கமானது | | |
| 3.2 | நிதி அதிகார கையளிப்பு பற்றி நிறுவனத்திற்கு தெரியப்படுத்தல் | இணக்கமானது | | |
| 3.3 | சகல கொடுக்கல் வாங்கலும் இரண்டு அல்லது அதனிலும் கூடிய அலுவலர்களின் ஊடாக இடம்பெறும் வகையில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டிருத்தல் | இணக்கமானது | | |
| 3.4 | 2014.05.11 ஆம் திகதிய 171/2004 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் படி சம்பளப் பட்டியல் மென்பொருள் பொதியை பயன்படுத்துகையில் கணக்காளர்களின் நிர்வாகத்தின் கீழ் நடவடிக்கை எடுத்தல் | இணக்கமானது | | |
| **04** | **வருடாந்த திட்டத்தை தயாரித்தல்** | | | |
| 4.1 | வருடாந்த செயற் திட்டம் தயாரித்தல் | இணக்கமானது | | |
| 4.2 | வருடாந்த பெறுகை திட்டம் தயாரித்தல் | இணக்கமானது | | |
| 4.3 | வருடாந்த உள்ளகக் கணக்காய்வு திட்டம் தயாரித்தல் | இணக்கமானது | | |
| 4.4 | வருடாந்த மதிப்பீட்டை தயாரித்து தேசிய வரவுசெலவுத் திட்ட திணைக்களத்திற்கு (NBD) உரிய திகதியில் சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| 4.5 | வருடாந்த நிதிப்பாய்ச்சல் அறிக்கையை உரிய திகதியில் திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| **05** | **கணக்காய்வு வினாக்கள்** | | | |
| 5.1 | கணக்காய்வாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட தினத்தில் சகல கணக்காய்வு வினாக்களுக்கும் விடையளித்திருத்தல் | இணக்கமற்றது. | தலைமை அலுவலகம் மற்றும் 133 பிராந்திய அலுவலகங்களைக் கொண்டிருப்பதுடன் அலுவலர் எண்ணிக்கை குறைவு மற்றும் வேலைப்பழு காரணமாக பதிலளிக்கத் தாமதமாகியது. | எதிர்காலத்தில் உரிய திகதியில் பதில் வழங்க நடவடிக்கை எடுக்கின்றேன். |
| **06** | **உள்ளகக் கணக்காய்வு** | | | |
| 6.1 | நி.ஒ. 134 (2) DMA/1-2019 இன்படி வருட ஆரம்பத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்து உள்ளகக் கணக்காய்வுத் திட்டங்களைத் தயாரித்தல் | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 6.2 | அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாதத்தினுள் பதிலளிக்கப்பட்டது | இணக்கமற்றது | கிளை அலுவலகங்களிலிருந்து பதில் பெற ஒரு மாதத்திற்கு மேற்பட்ட காலம் எடுத்தமை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்து வக் குழுவிற்கு அறிவித்து விரைவாக பதில் வழங்க நடவடிக்கை எடுத்தல். |
| 6.3 | *2018* ஆம் ஆண்டின் *19* ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் *404(4)* ஆம் உப பிரிவின் பிரகாரம் அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகளும் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. | இணக்கமானது | | |
| 6.4 | *134(3)* நிதி ஒழுங்கு விதியின் பிரகாரம் உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் கணக்காய்வாளர் அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டது. | இணக்கமானது | | |
| **07** | **கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு** | | | |
| 7.1 | DMA சுற்றறிக்கை 1-2019 இன் பிரகாரம் குறைந்தபட்சம் 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் கூட்டங்கள் நடைபெற்றது | இணக்கமானது | | |
| **08** | **சொத்து முகாமைத்துவம்** | | | |
| 8.1 | *01/2017* ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் *07* பந்தியின் பிரகாரம் சொத்து கொள்வனவு மற்றும் அகற்றல் தொடர்பிலான தகவல்கள் கொன்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது | இணக்கமானது | | |
| 8.2 | மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையின் *13* ஆம் பந்தியின் பிரகாரம் சுற்றறிக்கையின் விதிகளை அமுல்படுத்தவும் அத்தகைய அதிகாரியை கொம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு அனுப்பவும் பொருத்தமான தொடர்பு அதிகாரி நியமிக்கப்பட்டுளார். | இணக்கமானது | | |
| 8.3 | *05/2016* ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் பொருட்கள் கணக்கெடுக்கப்பட்டு உரிய அறிக்கைகளானது கணக்காய்வாளர் அதிபதிக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டது | இணக்கமானது | | |
| 8.4 | சுற்றறிக்கையில் குறிப்பிட்ட காலப்பகுதியினுள் வருடாந்த கணக்கெடுப்பு மூலம் வெளிப்படுத்தப்பட்ட மேலதிகம் மற்றும் பற்றாக்குறைக்கான பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட்டது | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 8.5 | நிஒ. *772* இன் பிரகாரம் பாவனைக்கு உகந்ததற்ற பொருள்கள் அகற்றப்பட்டது | இணக்கமானது | | |
| **09** | **வாகன முகாமைத்துவம்** | | | |
| 9.1 | குழும வாகனங்களிற்கான நாளாந்த வாகன ஓட்ட அறிக்கை மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கை தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் நாயகத்திற்கு உரிய நேரத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. | இணக்கமானது | | |
| 9.2 | பயன்பாடற்ற வாகனங்கள் பயன்பாடு நீக்கப்பட்டதன் *6* மாதங்களினுள் அகற்றப்பட்டது. | இணக்கமானது | | |
| 9.3 | வாகன ஏடுகள் பராமரிக்கப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டது. | இணக்கமானது | | |
| 9.4 | ஒவ்வொரு வாகன விபத்து தொடர்பில் நி.ஒ *103*, *104*, *109* மற்றும் *110* இற்கு அமைவாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. | இணக்கமானது | | |
| 9.5 | *2016.12.29* ஆம் திகதிய் *2016/30* ஆம் அரச நிருவாக சுற்றிக்கையிலன் *3.1* ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு அமைவாக வாகன எரிபொருள் பாவனை மீளப் பரீட்சிக்கப்பட்டது. | இணக்கமற்றது | நிலவும் எரிபொருள் பற்றாக்குறை மற்றும் தற்போது செயற்படுத்தப்படும் எரிபொருள் கோட்டா (QR) முறை காரணமாக தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளது. | இந்த மட்டுப்படுத் தல்கள் நீக்கப்பட்ட வுடன் ஆரம்பிக்கப் படும். |
| 9.6 | குத்தகை காலம் முடிவடைந்த பின்னர் குத்தகை வாகனங்களின் உரித்து பதிவுப் புத்தகம் மாற்றப்பட்டது | இணக்கமானது | | |
| **10** | **வங்கிக் கணக்குகளின் முகாமைத்துவம்** | | | |
| 10.1 | வங்கி இணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு, சான்றுபடுத்தப்பட்டு உரியநேரத்தில் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. | இணக்கமானது | | |
| 10.2 | மீளாய்வு ஆண்டு அல்லது முன்னைய ஆண்டுகளில் காணப்பட்ட செயற்படாத வங்கிக் கணக்குகள் தீர்க்கப்பட்டன | இணக்கமானது | | |
| 10.3 | வங்கி கணக்கிணக்க அறிக்கையில் வெளிப்படுத்தப்பட வேண்டிய நிலுவைகளை வெளிப்படுத்தல், சரிசெய்தல் மற்றும் ஒரு மாதத்தினுள் அத்தகைய நிலுவைகளைத் தீர்த்தல் | இணக்கமானது | | |
| **11** | **நிதி ஏற்பாடுகளின் பயன்பாடு** | | | |
| 11.1 | ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளை அதன் வரையறைகள் மீறாது செலவளிக்கப்ட்டது. | இணக்கமானது | | |
| 11.2 | நி.ஒ. *94(1)* இன் பிரகாரம் ஒதுக்கீட்டு வரம்பை மீறாத பொறுப்புக்கள் வருட இறுதியில் தொடர்ந்திருக்கும். | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| **12** | **அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு** | | | |
| 12.1 | எல்லைகளுக்கு இணங்குதல் | இணக்கமானது | | |
| 12.2 | கடன்களில் கால ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. | இணக்கமானது | | |
| 12.3 | ஒருவருடத்திற்கு மேற்பட்ட கடன் மீதிகள் தீர்க்கப்பட்டன. | இணக்கமற்றது | நிலுவையாகவுள்ள கடன் நிலுவைகளை தற்போது அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | கடன் செலுத்தாத சந்தர்ப்பத்தில் சட்ட நடவடிக்கை எடுத்தல். |
| **13** | **பொது வைப்பு கணக்கு** | | | |
| 13.1 | காலம் பிந்திய வைப்புகள் தொடர்பில் நி.ஒ. *571* இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டது. | இணக்கமானது | | |
| 13.2 | பொது வைப்புகளுக்கான கட்டுப்பாட்டு கணக்கை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல். | இணக்கமானது | | |
| **14** | **கட்டுநிதிக் கணக்கு** | | | |
| 14.1 | வருட முடிவில் காசுப் புத்தகத்தின் மீதி திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டது. | இணக்கமானது | | |
| 14.2 | நி.ஒ. *371* இன் பிரகாரம் வழங்கப்பட்ட தற்செயலான இடைக்கால வழங்கல் பணி முடிவடைந்த பின்னர் ஒரு மாதத்தினுள் தீர்க்கப்பட்டது. | இணக்கமானது | | |
| 14.3 | நி.ஒ. *371* இன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட வரையறையை விஞ்சாத தற்காலிக இடைக்கால வழங்கல். | இணக்கமானது | | |
| 14.4 | மாதந்தம் திறைசேரி புத்தகத்துடன் கட்டுநிதி கணக்கின் மீதி கணக்கிணக்கம் செய்யப்பட்டது. | இணக்கமானது | | |
| **15** | **வருமானக் கணக்கு** | | | |
| 15.1 | ஒழுங்குவிதிகள் பிரகாரம் சேகரிக்கப்பட்ட வருமானத்தை மீளளிப்புச் செய்யப்படல் வேண்டும். | இணக்கமானது | | |
| 15.2 | திரட்டப்பட்ட வருமானம் வைப்புக் கணக்கில் வரவு வைக்காது நேரடியாக வருமான கணக்கில் வரவு வைக்கப்பட்டது. | இணக்கமானது | | |
| 15.3 | நி.ஒ *176* இன் பிரகாரம் வருமானத்தின் மீதியை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல். | இணக்கமானது | | |
| **16** | **மனிதவள முகாமைத்துவம்** | | | |
| 16.1 | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எல்லைக்குள் பணியாளர்களைப் பராமரித்தல். | இணக்கமற்றது | அலுவலர்களை ஆட்சேர்ப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகிறது. | இணைப்பு 1 இல் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. |
| 16.2 | அனைத்து ஆளணி அங்கத்தவர்களுக்கும் எழுத்து மூலம் கடமை நிரல் வழங்கப்பட்டது. | இணக்கமானது | | |
| 16.3 | *2017.09.20* ஆம் திகதிய *04/2017* ஆம் ஆளுனு சுற்றறிக்கையின் பிரகாரம் அனைத்து | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு(ஆளுனு) சமர்ப்பிக்கப்பட்டது | | | |
| **17** | **பொது மக்களுக்கு தகவல் வழங்கல்** | | | |
| 17.1 | தகவல் உரிமைச் சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக தகவல் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டு தகவல் பதிவேடு பராமரிக்கப்படுவதுடன் இற்றைப்படுத்தப்படுகின்றது | இணக்கமானது | | |
| 17.2 | நிறுவனத்தின் தகவல்கள் பொது மக்களுக்கு வலைத் தளத்தினூடாக அல்லது வேறு ஏதேனும் முறையில் வழங்கப்படுவதுடன் அரச அதிகாரிக்கெதிரான பாராட்டு/ குற்றச்சாட்டினை இந்த வலையத் தளத்தினூடாக அல்லதுவேறு ஏதேனும் முறையில் வழங்க வசதி செய்யப்பட்டுள்ளது | இணக்கமானது | | |
| 17.3 | சட்டத்தின் *08* மற்றும் *10* ஆம் பிரிவுகளின் பிரகாரம் வருடத்திற்கு இருமுறையான அறிக்கை மற்றும் ஆண்டறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. | இணக்கமானது | | |
| **18** | **பிரஜைகள் பட்டயத்தை அமுல்படுத்தல்** | | | |
| 18.1 | பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் *05/2008* மற்றும் *05/2018(1)* ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நிறுவனமானது ஓர் பிரஜைகள் சாசனம்/ பிரஜைகள் வாடிக்கையாளர் சாசனத்தினை உருவாக்கி அமுல்படுத்தியது. | இணக்கமற்றது | உரிய பிரிவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. | தற்போது தயாரிப்பு நடவடிக்கை முடியும் தறுவாயில் உள்ளது. |
| 18.2 | சுற்றறிக்கையின் *2.3* ஆம் பந்தியின் பிரகாரம் ஓர் பிரஜைகள் சாசனம்/ பிரஜைகள் வாடிக்கையாளர் சாசனத்தினை உருவாக்குவதையும் அமுல்படுத்துவதையும் கண்காணிக்கவும் மதிப்பிடவும் நிறுவனத்தால் ஓர் முறைமை வடிவமைக்கப்பட்டுள்ளது | இணக்கமற்றது | உரிய பிரிவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. | மேற்பார்வை மற்றும் மதிப்பீடு பொருட்டு முறைமையொன்று தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| **19** | **மனிதவள திட்டத்தை தயாரித்தல்** | | | |
| 19.1 | 2018.01.24 ஆம் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை இல. 02/2018 இனது இணைப்பு 2 இன் வடிவமைப்பின் பிரகாரம் மனிதவள திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது | இணக்கமானது | | |
| 19.2 | மேற்கூறப்பட்ட மனிதவள திட்டத்தில் ஆளனியினரின் ஒவ்வொரு அங்கத்தவருக்கும் ஒவ்வொரு வருடமும் *12* மணித்தியாளத்திற்கு குறையாத குறைந்தபட்ச பயிற்சிக்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. | இணக்கமற்றது | 2022 இற்கான பயிற்சி பொருட்டு ஒதுக்கப்பட்ட ஏற்பாடு மட்டுப்படுத்தப்பட்டமை காரணமாக. | பயிற்சிக்குத் தேவையான ஏற்பாட்டை வழங்குதல் |

| | | | | |
|---|---|---|---|---|
| 19.3 | மேலே குறிப்பிட்ட சுற்றறிக்கை இணைப்பு 01 இல் காட்டப்பட்ட வடிவில் மொத்த அலுவலர்களிற்கும் வருடாந்த நிறைவேற்றுகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. | இணக்கமானது | | |
| 19.4 | மேற்படி சுற்றறிக்கையின் பந்தி 6.5 இன் படி மனிதவள மேம்பாட்டுத் திட்டம் தயாரித்தல், திறன் அபிவிருத்தி செயற்படுத்தல் தொடர்பில் ஒரு சிரேஸ்ட அலுவலர் நியமிக்கப்படல் | இணக்கமானது | | |
| **20** | **கணக்காய்வு பந்திகளிற்கான பொறுப்புக்கூறல்** | | | |
| 20.1 | முந்தைய வருடத்திற்கான கணக்காய்வாளர் நாயகத்தால் வெளியிடப்பட்ட கணக்காய்வுப் பத்திகளில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்தல் | இணக்கமானது. | | |